அந்தரங்கமானது

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை - 2022 (2023)

## 21- பொருளியல்

### புள்ளியிடும் திட்டம்




இந்த விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்துக்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக்கொள்ளும் கருத்துக்களுக்கிணங்க, இதில் உள்ள சில விடயங்கள் மாறலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன

முழுப்பதிப்புரிமையுடையது

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

# பாட உள்ளடக்கம்


| | பக்கங்கள் | | |
|---|---|---|---|
| வினாப்பத்திர அமைப்பு | i | - | ii |
| பொருளியல் வினாப்பத்திரம் I | 01 | - | 12 |
| பொருளியல் I இற்கான புள்ளி வழங்கும் திட்டம் | 13 | - | 13 |
| பொருளியல் II இற்கான புள்ளி வழங்கும் திட்டம் | 14 | - | 50 |



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

# க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை - 2022 (2023)

## 21 - பொருளியல்

## புள்ளி வழங்கும் விதம்

- பத்திரம் I

காலம் 2 மணித்தியாலம்
5 விடைகளைக் கொண்ட 50 பல்தேர்வு வினாக்கள், சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.
ஒரு விடைக்கு 01 புள்ளி வீதம் மொத்தப் புள்ளிகள் 50

- பத்திரம் II

காலம் 3 மணித்தியாலம்
இப்பத்திரம் 2 பிரிவுகளைக் கொண்டது
(அ) உப பகுதி - கட்டுரை வினாக்கள் - 05
(ஆ) உப பகுதி - கட்டுரை வினாக்கள் 05

குறைந்தது ஒரு பகுதியில் வினாக்கள் 02 வீதம் தெரிவு வினாக்கள் 5 இற்கு விடை எழுதியிருத்தல் வேண்டும். ஒரு வினாவுக்கு 20 புள்ளி வீதம் மொத்த புள்ளிகள் 100.

| | | |
|---|---|---|
| இறுதிப் புள்ளி கணித்தல் | பத்திரம் I | 50 |
| | பத்திரம் II | 100 |
| இறுதிப்புள்ளி | $50+\left(\frac{100}{2}\right)=100$ | |



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடல் - பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற குமிழ்முனை பேனாவை பயன்படுத்தவும்.
2. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
3. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, சிற்றொப்பத்தை இடவும்.
4. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் ☐ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.

**உதாரணம் - வினா இல 03**

(i) ........................................................................... ✓ $\frac{4}{5}$
...........................................................................
...........................................................................

(ii) ........................................................................... ✓ $\frac{3}{5}$
...........................................................................
...........................................................................

(iii) ........................................................................... ✓ $\frac{3}{5}$
...........................................................................
...........................................................................

(03) (i) $\frac{4}{5}$ + (ii) $\frac{3}{5}$ + (iii) $\frac{3}{5}$ = $\boxed{\frac{10}{15}}$

**பல்தேர்வு விடைத்தாள் (துளைத்தாள்)**

1. க.பொ.த.(உ. தர) மற்றும் தகவல் தொழிநுட்பப் பரீட்சைக்கான துளைத்தாள் திணைக்களத்தால் வழங்கப்படும். சரியாக துளையிடப்பட்டு அத்தாட்சிப்படுத்திய துளைத்தாள் தங்களுக்கு கிடைக்கப்பெறும். அத்தாட்சிப்படுத்திய துளைத்தாளைப் பயன்படுத்துவது பரீட்சகரின் கடமையாகும்.
2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.
3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை O அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும்.


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**கட்டமைப்பு கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.
2. புள்ளிகளை ஓவலண்ட் கடதாசியின் இடது பக்கத்தில் குறிக்கவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக 2 இலக்கங்களில் பதியவும். வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதுவும்.

**புள்ளிப்பட்டியல் தயாரித்தல்**

இம்முறை சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது. இது தவிர ஒவ்வொரு வினாப் பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும். பத்திரம் I ற்கான பல்தேர்வு வினாப்பத்திரம் மட்டும் இருப்பின் புள்ளிகள் இலக்கத்திலும் எழுத்திலும் பதியப்பட வேண்டும்.

○ ○ ○



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
**Department of Examinations, Sri Lanka**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2022(2023)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2022(2023)
General Certificate of Education (Adv. Level) Examination, 2022(2023)

| | | |
|---|---|---|
| ආර්ථික විද්‍යාව I<br>பொருளியல் I<br>Economics I | **21 T I** | පැය දෙකයි<br>*இரண்டு மணித்தியாலம்*<br>*Two hours* |

**அறிவுறுத்தல்கள் :**

※ எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

※ விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது சுட்டெண்ணை எழுதுக.

※ விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.

※ **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து, அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய விடைத்தாளில் புள்ளடி (×) இடுவதன் மூலம் காட்டுக.

**1.** பொருளியலின் மையப்பிரச்சினையாவது
(1) நியாயமான வரி முறைமையினைத் தாபிப்பதாகும்.
(2) ஒவ்வொரு பிரசைக்கும் ஒரு குறைந்த பட்ச வருமானத்தை உறுதிப்படுத்துவதாகும்.
(3) விருப்பங்களைப் பூர்த்தி செய்வதற்காக அருமையான உற்பத்தி வளங்களை ஒதுக்கீடு செய்வதாகும்.
(4) வளங்களை மிகைப் பயன்பாட்டிற்கு உட்படுத்தாமல் தடுக்கும் சட்டங்களை இயற்றுவதாகும்.
(5) வளங்களை வீணடிக்காமல் பொருட்களையும் சேவைகளையும் உற்பத்தி செய்வதாகும்.

**2.** பின்வருவனவற்றுள் உற்பத்தி இயல்தகவு வளையியில் வெளிப்புற அல்லது வலப்புற இடப்பெயர்வை ஏற்படுத்துவது எது?
(1) வேலையின்மையில் ஏற்படும் ஒரு அதிகரிப்பு
(2) பணவீக்கத்தில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு
(3) மூலதனப் பொருட்களின் கையிருப்பில் ஓர் அதிகரிப்பு
(4) இயற்கை வளங்களில் ஏற்படும் ஒரு வீழ்ச்சி
(5) உழைப்பாளர்களின் எண்ணிக்கையில் ஏற்படும் ஒரு வீழ்ச்சி

**3.** பின்வருவனவற்றுள் உற்பத்தி இயல்தகவு வளையியைப் பயன்படுத்திக் காட்ட முடியாதது,
(1) நுகர்வோன் கேள்வி ஆகும். (2) சாத்திய வெளியீடு ஆகும்.
(3) பொருளாதார வளர்ச்சி ஆகும். (4) அமையச் செலவு ஆகும்.
(5) வேலையின்மை ஆகும்.

**4.** பின்வருவனவற்றுள் சமூக சந்தைப் பொருளாதாரம் ஒன்றின் பண்பாக அமைவது எது?
(1) சகல வளங்களினதும் தனியார் உரிமை
(2) சகல வளங்களினதும் பொதுத்துறை உரிமை
(3) விலைப் பொறிமுறையின் தொழிற்பாடு தொடர்பில் ஒழுங்குறுத்தல் கட்டமைப்பு காணப்படாமை
(4) நலன்புரிச் சேவைகளை வழங்குவதில் அரசாங்கம் தீவிரமாக ஈடுபடல்
(5) அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்க்க மத்திய திட்டமிடலைப் பயன்படுத்தல்

**5.** கடந்த வருடம் 15 மில்லியன் தொன் சோளம் உற்பத்தி செய்யப்பட்டு ஒரு தொன் 30 000 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டது. இவ்வருடம் 15 மில்லியன் தொன் சோளம் தொன் ஒன்று 25 000 ரூபாவுக்கு விற்கப்பட்டது. கேள்வி மற்றும் நிரம்பலில் ஏற்படும் பின்வரும் மாற்றங்களில் எது இந்நிலையினை ஏற்படுத்தியிருக்கலாம்?

| | கேள்வி | நிரம்பல் |
|---|---|---|
| (1) | அதிகரிப்பு | அதிகரிப்பு |
| (2) | அதிகரிப்பு | வீழ்ச்சி |
| (3) | வீழ்ச்சி | அதிகரிப்பு |
| (4) | வீழ்ச்சி | வீழ்ச்சி |
| (5) | அதிகரிப்பு | மாற்றமில்லை |



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/


6. ஒரு நுகர்வோன் தனது வருமானம் முழுவதையும் X மற்றும் Y ஆகிய இரு பொருள்களின் கொள்வனவுக்குச் செலவிடுவதாகக் கருதுக. ஏனைய காரணிகள் மாறா நிலையில் நுகர்வோனின் வருமானமும் X மற்றும் Y பொருள்களுக்கான விலையும் இரட்டிக்குமாயின் நுகர்வோன்
   (1) X மற்றும் Y ஆகிய பொருள்களின் கொள்வனவை இரட்டிப்பார்.
   (2) X பொருளை அதிகமாகவும் Y பொருளை குறைவாகவும் கொள்வனவு செய்வார்.
   (3) X பொருளைக் குறைவாகவும் Y பொருளை அதிகமாகவும் கொள்வனவு செய்வார்.
   (4) X மற்றும் Y ஆகிய இரண்டு பொருள்களையும் குறைந்தளவில் கொள்வனவு செய்வார்.
   (5) X மற்றும் Y பொருள்களின் முன்னர் கொள்வனவு செய்த அதே அளவைக் கொள்வனவு செய்வார்.

7. இழிவுப் பொருளொன்றின் கேள்வி வளையியானது ஏன் கீழ்நோக்கிச் சரிவடைகிறது என்பதை விளக்க பின்வருவனவற்றில் எது உதவுகின்றது?
   (1) வருமான விளைவும் பதிலீட்டு விளைவும் கேள்வித் தொகையை ஒரே திசையில் நகர்த்தும்.
   (2) வருமான விளைவானது பதிலீட்டு விளைவுக்கு சமனாகிறது.
   (3) எதிர்க்கணிய வருமான விளைவானது பதிலீட்டு விளைவை விஞ்சுகிறது.
   (4) பதிலீட்டு விளைவானது எதிர்க்கணிய வருமான விளைவை விஞ்சுகிறது.
   (5) வருமானம் அதிகரிப்பதுடன் நுகர்வோர் பொருளின் நுகர்வை அதிகரிப்பர்.

8. X பொருளும் Y பொருளும் நிரப்பு பொருள்களாகும். ஏனைய காரணிகள் மாறா நிலையில் Y பொருளின் நிரம்பலில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு X பொருளின் சமநிலை விலையின் மீதும் தொகையின் மீதும் ஏற்படுத்தும் விளைவு யாது?

| | X பொருளின் சமநிலை விலை | X பொருளின் சமநிலைத் தொகை |
|---|---|---|
| (1) | வீழ்ச்சி | வீழ்ச்சி |
| (2) | வீழ்ச்சி | அதிகரிப்பு |
| (3) | அதிகரிப்பு | வீழ்ச்சி |
| (4) | அதிகரிப்பு | அதிகரிப்பு |
| (5) | வீழ்ச்சி | மாற்றமில்லை |

9. குறித்த ஒரு பொருளின் சந்தைக் கேள்வி வளையி பின்வரும் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது.




10 ரூபாவுக்கும் 8 ரூபாவுக்கும் இடைப்பட்ட விலையில் மேலே வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள கேள்வி வளையியானது
   (1) பூரண நெகிழ்வுடையது. (2) சார்பளவில் நெகிழ்வுள்ளது.
   (3) சார்பளவில் நெகிழ்வற்றது. (4) அலகு நெகிழ்வுள்ளது.
   (5) பூரண நெகிழ்வற்றது.

10. ஒரு போட்டிச் சந்தையில் விற்கப்படும் குறித்த ஒரு பொருளின் கேள்வி நிரம்பல் வளையிகள் பின்வரும் சமன்பாடுகளால் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகின்றன. விலைகள் ரூபாவில் காட்டப்பட்டுள்ளன.

   கேள்வி : $Q_D = 40 - 2P$   நிரம்பல் : $Q_S = -40 + 8P$

   சந்தை சமநிலையில் உள்ளபோது மொத்த மிகையின் அளவு
   (1) 36 ஆகும். (2) 144 ஆகும். (3) 180 ஆகும். (4) 192 ஆகும். (5) 360 ஆகும்.



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

11. அரிசிக்கும் பாணுக்கும் இடையிலான குறுக்கு விலை நெகிழ்ச்சி 3.0 ஆகும் எனக் கருதுக. அரிசி விலையில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு பாணின் கேள்வியை 75% இனால் அதிகரிக்கச் செய்கிறது. அரிசி விலையில் ஏற்பட்ட எந்தளவு மாற்றம் இதனை ஏற்படுத்தியிருக்கும்?

| | ஒரு கிலோகிராம் அரிசியின் விலையில் ஏற்படும் மாற்றம்(ரூபா) | |
|---|---|---|
| | இருந்து | வரை |
| (1) | 50 | 70 |
| (2) | 60 | 72 |
| (3) | 75 | 90 |
| (4) | 80 | 105 |
| (5) | 100 | 125 |

12. கோதுமை மாவின் சந்தை சமநிலை விலை கிலோகிராம் ஒன்றிற்கு 350 ரூபாவாகும். சந்தைச் சமநிலைத் தொகை 30 மில்லியன் கிலோகிராமாகும். இந்நிலைமைகளின் கீழ், பின்வருவனவற்றில் சந்தையில் கோதுமை மாவுக்கு மிகைக் கேள்வியை ஏற்படுத்தும் கொள்கை எது?
(1) கிலோகிராம் ஒன்றிற்கு 330 ரூபா உச்ச விலை விதிப்பு
(2) கிலோகிராம் ஒன்றிற்கு 330 ரூபா குறைந்தபட்ச விலை விதிப்பு
(3) கிலோகிராம் ஒன்றிற்கு 400 ரூபா உச்ச விலை விதிப்பு
(4) கிலோகிராம் ஒன்றிற்கு 350 ரூபா குறைந்தபட்ச விலை விதிப்பு
(5) கிலோகிராம் ஒன்றிற்கு 375 ரூபா உச்ச விலை விதிப்பு

13. கீழ் நோக்கிச் சரிந்து செல்லும் கேள்வி வளையியும் மேல்நோக்கிச் செல்லும் நிரம்பல் வளையியும் காணப்படும்போது ஒரு பொருளின் மீது விதிக்கப்படும் ஓர் அலகு வரியானது
(1) உற்பத்தியாளர் மிகையை அதிகரிக்கும்.
(2) நுகர்வோன் மிகையை அதிகரிக்கும்.
(3) நிரம்பல் வளையியை வலப்புறமாக நகர்த்தும்.
(4) வரியினளவை விட கூடுதலாக விலையை அதிகரிக்கும்.
(5) வரியினளவை விடக் குறைவாக விலையை அதிகரிக்கும்.

14.



மேலுள்ள வரைபடம் சோளத்துக்கான சந்தைக் கேள்வி நிரம்பல் வளையிகளைக் காட்டுகிறது. சோள விவசாயிகளுக்கு உதவ அரசாங்கம் பயனுறுதிவாய்ந்த குறைந்தபட்ச விலையை அறிமுகப்படுத்துவதாகக் கொள்க. பயனுறுதி வாய்ந்த குறைந்தபட்ச விலையாக $OP_2$ ஐ பேணிச்செல்ல வேண்டுமாயின் அரசாங்கம் என்ன செய்ய வேண்டும்?
(1) $Q_1 - Q_2$ தொகையைக் கொள்வனவு செய்ய வேண்டும்
(2) $0 - Q_2$ தொகையைக் கொள்வனவு செய்ய வேண்டும்
(3) $Q_1 - Q_3$ தொகையைக் கொள்வனவு செய்ய வேண்டும்
(4) $Q_2 - Q_3$ தொகையைக் கொள்வனவு செய்ய வேண்டும்
(5) $Q_1 - Q_2$ தொகையைக் விற்பனை செய்ய வேண்டும்

15. குறித்த உற்பத்தி நடவடிக்கை ஒன்றில் உழைப்பு மாத்திரம் மாறுங்காரணியாகப் பயன்படுத்தப்படுவதாகக் கொள்க. இந்நிறுவனத்தின் வெளியீடு அதிகரிக்கும்போது அதன் குறுங்கால எல்லைச் செலவானது அதிகரிக்குமாயின் பின்வருவனவற்றில் எது உண்மையாக இருக்க வேண்டும்?
(1) உழைப்பின் சராசரி உற்பத்தி நிலையானது.
(2) உழைப்பின் சராசரி உற்பத்தி அதிகரிக்கும்.
(3) உழைப்பின் எல்லை உற்பத்தி உழைப்பின் சராசரி உற்பத்தியை விட அதிகமாகும்.
(4) உழைப்பின் எல்லை உற்பத்தி வீழ்ச்சியடையும்.
(5) உழைப்பின் மொத்த உற்பத்தி வீழ்ச்சியடையும்.


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

16. பொருளியல் இலாபமானது கணக்கியல் இலாபத்திலிருந்து பின்வருவனவற்றுள் எதனைக் கழிப்பதன் மூலம் கணிப்பிடப்படும்?
(1) நிலையான செலவுகள் (2) உள்ளார்ந்த செலவுகள்
(3) பெறுமானத் தேய்வு (4) நேரடியான செலவுகள்
(5) மொத்த செலவுகள்

17. பின்வரும் செலவுகளில் குறுங்காலத்தில் வெளியீடு அதிகரிக்கும்போது தொடர்ச்சியாக குறைவடைந்து செல்வது எது?
(1) மொத்த மாறும் செலவு (2) மொத்த நிலையான செலவு
(3) சராசரி மாறும் செலவு (4) சராசரி நிலையான செலவு
(5) சராசரி மொத்த செலவு

18. ஒரு போட்டி உற்பத்தி நிறுவனத்தின் தற்போதைய வெளியீட்டு மட்டத்தில் எல்லைச்செலவு 100 ரூபாவாகும், சராசரி மாறும்செலவு 60 ரூபாவாகும், சராசரி நிலையான செலவு 40 ரூபாவாகும். உற்பத்தியின் ஓர் அலகின் விலை 100 ரூபாவாகும். இந்நிறுவனம் தொடர்பில் பின்வரும் கூற்றுக்களில் உண்மையானது எது?
(1) விலையானது சராசரி மொத்தச் செலவுக்குச் சமனாகையால் பொருளியல் இலாபம் பூச்சியமாகும்
(2) மொத்த வருவாய் மொத்த செலவை விடக் குறைவாதலால் பொருளியல் இலாபம் எதிர்க்கணியமாகும்
(3) மொத்த வருவாய் மொத்த செலவை விடக் கூடுதலாகையால் பொருளியல் இலாபம் நேர்க்கணியமாகும்
(4) விலையானது சராசரி மாறும்செலவை விடக் கூடுதலாகையால் பொருளியல் இலாபம் எதிர்க்கணியமாகும்
(5) எல்லை வருவாய் எல்லைச் செலவுக்குச் சமப்படுவதால் பொருளியல் இலாபம் பூச்சியமாகும்

19. பின்வருவனவற்றுள் வர்த்தக சக்கரவட்டத்தின் கட்டங்களை சரியாக விபரிப்பது எது?
(1) விரிவாக்கம், வளர்ச்சி, உச்சம், பின்னடைவு
(2) விரிவாக்கம், உச்சம், பின்னடைவு, தாழ்வுப்புள்ளி
(3) உச்சம், விரிவாக்கம், தாழ்வுப்புள்ளி, பின்னடைவு
(4) விரிவாக்கம், மீட்சி, தாழ்வுப்புள்ளி, உச்சம்
(5) தாழ்வுப்புள்ளி, உச்சம், பின்னடைவு, விரிவாக்கம்

20. மொத்த உள்நாட்டு உற்பத்தியைக் கணிப்பிடுவதில் நுகர்வுச் செலவீடாகக் (C) வகைப்படுத்தப்படுவது பின்வருவனவற்றுள் எது?
(1) பாண் உற்பத்தி செய்வதற்காக பேக்கரி உற்பத்தியாளர் கோதுமை மாவைக் கொள்வனவு செய்தல்
(2) சக்திவலு அமைச்சினால் ஒரு புதிய கணினி மென்பொருள் கொள்வனவு செய்யப்படல்
(3) தர்மஸ்தாபனம் ஒன்றிற்கு பயன்படுத்திய உடைகளை அன்பளிப்புச் செய்தல்
(4) பொதுக் கம்பனி ஒன்றின் 1000 பங்குகளைக் கொள்வனவு செய்தல்
(5) உணவு விடுதியொன்றில் இரவு உணவுக்காக 3000 ரூபாவை செலவு செய்தல்

21. செல்வந்தர் ஒருவர் நுவரெலியாவில் தமது ஓய்வுக்காக வருடாந்த வாடகைக்கு பெற்றிருந்த ஓர் ஓய்வு விடுதியை விலைகொடுத்து கொள்வனவு செய்வதாகக் கொள்க. இப்பரிமாற்றத்தின் காரணமாக,
(1) நுகர்வுச் செலவு (C) வீழ்ச்சியடைவதால் விடுதியின் கொள்வனவுப் பெறுமதியின் அளவினால் மொத்த உள்நாட்டு உற்பத்தி குறைவடையும்.
(2) விடுதியின் கொள்வனவுப் பெறுமதியின் அளவினால் முதலீடு (I) அதிகரிப்பதால் மொத்த உள்நாட்டு உற்பத்தி அதிகரிக்கும்.
(3) பயன்படுத்திய ஒன்றை மீண்டும் விற்பனை செய்வதால் மொத்த உள்நாட்டு உற்பத்தி பாதிக்கப்படாது.
(4) முதலீடு (I) வீழ்ச்சியடைவதால் மொத்த உள்நாட்டு உற்பத்தி வீழ்ச்சியடையும்.
(5) முதலீடு (I) அதிகரிக்கும் ஆனால் நுகர்வு (C) வீழ்ச்சியடையும்.

22. தரப்பட்ட ஒரு வருடத்தில் பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்தி 1200 பில்லியன் ரூபாவாகவும் மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தி 1000 பில்லியன் ரூபாவாகவும் இருப்பின் மொத்த உள்நாட்டு உற்பத்திச் சுருக்கியின் அளவு
(1) 12% (2) 20% (3) 83.3 (4) 120 (5) 200



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

23. பின்வரும் அட்டவணை ஒரு பொருளாதாரத்தின் பேரினப் பொருளியல் தரவுகள் சிலவற்றைக் காட்டுகிறது.

| வகை | பெறுமதி (பில்லியன் ரூபா) |
|---|---|
| மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம் | 50 |
| பொருள்களினதும் காரணியல்லாப் பணிகளினதும் ஏற்றுமதி | 10 |
| பொருள்களினதும் காரணியல்லாப் பணிகளினதும் இறக்குமதி | 16 |
| அரச சேமிப்புகள் | –3 |

இப்பொருளாதாரத்தின் தனியார் சேமிப்பின் பெறுமதியாவது
(1) 47 பில்லியன் ரூபா. (2) 44 பில்லியன் ரூபா. (3) 41 பில்லியன் ரூபா.
(4) 34 பில்லியன் ரூபா. (5) 31 பில்லியன் ரூபா.

24. ஒரு குறித்த பொருளாதாரத்தில் மொத்த வருமானம் 500 மில்லியன் ரூபாவிலிருந்து 1000 மில்லியன் ரூபாவாக அதிகரிக்கும்போது மொத்த நுகர்வுச் செலவினமானது 800 மில்லியன் ரூபாவிலிருந்து 1200 மில்லியன் ரூபாவாக அதிகரிப்பதாகக் கொள்க. இப்பொருளாதாரத்தின் தன்னிச்சையான நுகர்வு மற்றும் எல்லை நுகர்வு நாட்டம் என்பவற்றின் பெறுமதி

| | தன்னிச்சையான நுகர்வு (மில்லியன் ரூபா) | எல்லை நுகர்வு நாட்டம் |
|---|---|---|
| (1) | 500 | 1.5 |
| (2) | 400 | 0.8 |
| (3) | 300 | 0.2 |
| (4) | 200 | 0.1 |
| (5) | 100 | 0.8 |

25. ஒரு பொருளாதாரத்தின் எல்லை நுகர்வு நாட்டம் 0.8 ஆகவும், மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது நிறைதொழில் மட்ட மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தியை விட 1000 பில்லியன் ரூபா குறைவாக உள்ளதாகவும் கருதுக. பொருளாதாரத்தில் நிறைதொழில் மட்ட வெளியீட்டை அடைய மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்க வேண்டுமாயின் அரசாங்கம் தனது கொள்வனவுகளை எந்த அளவினால் அதிகரிக்க வேண்டும்?
(1) 150 பில்லியன் ரூபா (2) 200 பில்லியன் ரூபா (3) 250 பில்லியன் ரூபா
(4) 300 பில்லியன் ரூபா (5) 350 பில்லியன் ரூபா

26. ஒரு பொருளாதாரத்தின் செலவிடத்தக்க வருமானத்திலிருந்து எல்லை நுகர்வு நாட்டம் 0.8 ஆகவும் எல்லா வருமானங்கள் மீதான அரச வரிகள் நிலையான 25% ஆகவுள்ளதாகவும் கருதுக. இப்பொருளாதாரத்தின் மொத்த தேசிய வருமானம் 200 பில்லியன் ரூபாவாக அதிகரித்தால் நுகர்வானது ஆரம்பத்தில்
(1) 50 பில்லியன் ரூபாவினால் அதிகரிக்கும்.
(2) 120 பில்லியன் ரூபாவினால் அதிகரிக்கும்.
(3) 150 பில்லியன் ரூபாவினால் அதிகரிக்கும்.
(4) 160 பில்லியன் ரூபாவினால் அதிகரிக்கும்.
(5) 750 பில்லியன் ரூபாவினால் அதிகரிக்கும்.

27. பகுதியளவு ஒதுக்குகளைக் கொண்ட வங்கி முறையுள்ள ஒரு பொருளாதாரத்தில் ஒதுக்கு வீதம் 10% ஆயின் வைப்பாக்கப் பெருக்கியின்படி 50 மில்லியன் ரூபா ஆரம்ப வைப்பின் மூலம் மேற்கொள்ளப்படும் மொத்த வைப்புக்களின் அளவு யாது?
(1) 500 மில்லியன் ரூபா (2) 450 மில்லியன் ரூபா (3) 400 மில்லியன் ரூபா
(4) 350 மில்லியன் ரூபா (5) 50 மில்லியன் ரூபா

28. பின்வருவனவற்றுள் பணநிரம்பலின் M2 வரைவிலக்கணத்தில் உள்ளடக்கப்படாதது எது?
(1) பொதுமக்கள் வசமுள்ள புழக்கப்பணம்
(2) பொதுமக்கள் வசமுள்ள கேள்வி வைப்புக்கள்
(3) பொதுமக்கள் வசமுள்ள சேமிப்பு வைப்புக்கள்
(4) பொதுமக்கள் வசமுள்ள தவணை வைப்புக்கள்
(5) பொதுமக்கள் வசமுள்ள கடனட்டைகள் (credit cards)


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

29. பரிமாற்றச் சமன்பாட்டின்படி Y = 500, M = 400, V = 5 ஆயின் P =

(1) $\frac{1}{4}$ (2) 4 (3) 6.25 (4) 80 (5) 100

30. பின்வரும் கொள்கைகளுள் பணவீக்க இடைவெளியை நிரப்புவதற்கான கொள்கை எது?
(1) ஒதுக்குத் தேவைகளைக் குறைத்தலும் பாதீட்டு குறைநிலையை அதிகரித்தலும்
(2) ஒதுக்குத் தேவைகளைக் அதிகரித்தலும் கழிவீட்டு வீதத்தைக் குறைத்தலும்
(3) பணநிரம்பலை அதிகரித்தல், அரச செலவீட்டைக் குறைத்தல், மற்றும் வரிகளைக் குறைத்தல்
(4) பணநிரம்பலைக் குறைத்தல், வரிகளை அதிகரித்தல், மற்றும் அரச செலவீட்டைக் குறைத்தல்
(5) பணநிரம்பலைக் குறைத்தல், வரிகளைக் குறைத்தல், மற்றும் அரச செலவீட்டைக் குறைத்தல்

31. பின்வருவனவற்றில் எது பணநிரம்பல் அதிகரிப்புக்கு இட்டுச் செல்லும்?
(1) வருமான வரி வீதங்களில் ஒரு வீழ்ச்சி
(2) அரச பாதீட்டுக் குறைநிலையில் ஒரு வீழ்ச்சி
(3) திறந்த சந்தையில் மத்திய வங்கி முறிகளைக் கொள்வனவு செய்தல்
(4) திறைசேரி பிணையங்களை வெளியீடு செய்வதன் மூலம் அரசாங்கத்தின் கடன் பெறல் அதிகரிப்பு
(5) கொள்கை வட்டி வீதங்களில் ஓர் அதிகரிப்பு

32. பொதுப் பொருள் தொடர்பில் பின்வருவனவற்றுள் எது உண்மையாகும்?
(1) ஒரு நபரின் நுகர்வு காரணமாக மற்றவர்களுக்கு கிடைக்கும் அளவு குறைவடையும்.
(2) அப்பொருளுக்கு பணம் செலுத்தாத நுகர்வோரை அதன் மூலம் நன்மை பெறுவதிலிருந்து விலக்கி வைக்க முடியும் என்பதாகும்.
(3) சில நுகர்வோருக்கு கிடைக்கும் பொதுப்பொருளின் மேலதிக ஒரு அலகானது ஏனைய நுகர்வோருக்கு கிடைக்கும் அளவை அதேயளவால் குறைக்கும்.
(4) ஒரு நபரின் நுகர்வு ஏனையவர்களை அப்பொருளை நுகர்வதிலிருந்து விலக்கி வைக்காது.
(5) பொருளுக்காக அனைவரும் சமமான விலையைச் செலுத்துவர்.

33. ஒரு பொருளின் உற்பத்தியானது நேர்க்கணிய வெளிவாரிகளுக்கு இட்டுச் செல்லுமாயின் பின்வருவனவற்றுள் எது உண்மையாகும்?
(1) அரசாங்கம் அப்பொருளை கட்டாயம் உற்பத்தி செய்யக் கூடாது.
(2) தனியார் துறையினரின் உற்பத்தியானது சமூக ரீதியில் விரும்பத்தக்க மட்டத்தை விடக் குறைவாக இருக்கும்.
(3) பொருளின் சந்தைவிலை மிகக் கூடுதலாக இருக்கும்.
(4) அரசாங்கம் அப்பொருள் உற்பத்தியை ஊக்குவிக்கக் கூடாது.
(5) தனியார் நிறுவனங்கள் பொருளை உற்பத்தி செய்வதன் மூலம் இலாபத்தை உச்சப்படுத்த முடியாதிருக்கும்.

34. பின்வருவனவற்றுள் எது வெளித்தள்ளுகை விளைவை விபரிக்கிறது?
(1) அரசாங்கம் பாதீட்டுக் குறைநிலையை நிதியீட்டம் செய்வதற்கு கடன்பெறும்போது அது தனியார் கடன் பெறுவோருடன் போட்டியாக அமைவதால் வட்டி வீதங்கள் அதிகரிப்பதனால் தனியார் முதலீடு குறைவடையும்.
(2) வட்டி வீதங்களை அதிகரிப்பதற்குப் பதிலாக அரசாங்கம் பணநிரம்பலை அதிகரிக்கும்போது பணவீக்கமும் தனியார் முதலீடும் அதிகரிக்கும்.
(3) வணிக நிறுவனங்கள் முதலீட்டுத் திட்டங்களுக்காகப் போட்டியிடும்போது அப்போட்டியானது பலவீனமான கம்பனிகளை வெளித்தள்ளி விடுவதால் வணிக நிறுவனங்கள் முறிவடைய ஏதுவாகும்.
(4) பணச்சந்தையில் அரசாங்கம் பிணையங்களை மீள் கொள்வனவு செய்யும்போது பணநிரம்பல் வீழ்ச்சியடைவதுடன் தனியார் முதலீட்டுக் கடன்களுக்காக போட்டியிட நேரிடும்.
(5) வணிகத் துறையினர் கடன்பெறும்போது அவர்கள் அரசாங்கத்துடன் போட்டியிடுகின்றனர். இது வட்டி வீதங்களை குறைத்து தனியார் முதலீடு அதிகரிப்பதற்கு ஏதுவாகும்.

35. சந்தைத் தோல்வி ஏற்படுவது
(1) நிறுவனங்கள் தொடர்ச்சியாக அதிக நட்டமடையும் போதாகும்.
(2) நிறுவனங்கள் தமது உற்பத்திக்கான சந்தைகளைப் பெற முடியாத போதாகும்.
(3) கேள்வி வீழ்ச்சியடைவதுடன் நிறுவனங்கள் தமது உற்பத்தியைக் குறைக்கும் நிர்ப்பந்தத்திற்குள்ளாகும் போதாகும்.
(4) விலை அதிகரிப்பதுடன் நுகர்வோர் தமது தேவைகளை பூர்த்தி செய்ய சிரமங்களை எதிர்நோக்கும் போதாகும்.
(5) விலைப் பொறிமுறையானது வளங்களை வினைத்திறனாக ஒதுக்கீடு செய்யாத போதாகும்.


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

36. 2020 ஆண்டில் இலங்கையின் அரசாங்க மீண்டெழும் செலவுகளின் மிகப் பெரிய கூறாக இருந்தது
(1) சம்பளங்களும் வேதனங்களுமாகும்.
(2) அரசாங்கத்தின் நடைமுறை மாற்றல்களும் மானியங்களுமாகும்.
(3) ஓய்வூதியங்களாகும்.
(4) வட்டிச் செலுத்தல்களாகும்.
(5) உர மானியங்களாகும்.

37. தற்போது இலங்கைக்கு இருபக்கக் கடன்களை வழங்கியுள்ள பிரதான நாடுகளாவன
(1) சீனா, இந்தியா, மற்றும் சவுதி அரேபியா ஆகும்.
(2) சீனா, இந்தியா, மற்றும் ஜப்பான் ஆகும்.
(3) சீனா, இந்தியா, மற்றும் உலக வங்கி ஆகும்.
(4) சீனா, இந்தியா, மற்றும் ஜேர்மனி ஆகும்.
(5) சீனா, ஜப்பான், மற்றும் வங்காளதேசம் ஆகும்.

38. பின்வரும் அட்டவணை இலங்கையினதும் இந்தியாவினதும் ஓரலகு இரு சக்கர வண்டியையும், ஓரலகு முச்சக்கர வண்டியையும் உற்பத்தி செய்யத் தேவையான உழைப்பு மணித்தியாலங்களைக் காட்டுகிறது.

| நாடு | இரு சக்கர வண்டி | முச்சக்கர வண்டி |
|---|---|---|
| இந்தியா | 15 | 60 |
| இலங்கை | 20 | 120 |

இந்த தகவல்களின் படி உண்மையான கூற்று எது?
(1) இரு பொருள் உற்பத்தியிலும் இலங்கை முழு நன்மையைக் கொண்டுள்ளது.
(2) இந்தியா இருசக்கர வண்டியில் சிறக்குமியல்பு அடைய வேண்டிய அதேவேளை, இலங்கைக்கு முச்சக்கரவண்டியில் சிறக்குமியல்பு அடைய வேண்டும்.
(3) இந்தியா முச்சக்கர வண்டி தொடர்பில் ஒப்பீட்டு நன்மையைக் கொண்டுள்ளது.
(4) இலங்கை முச்சக்கர வண்டி தொடர்பில் முழு நன்மையைக் கொண்டுள்ளது.
(5) இந்தியா இருசக்கர வண்டி மற்றும் முச்சக்கர வண்டி உற்பத்தியில் ஒப்பீட்டு நன்மையைக் கொண்டுள்ளது.

39. தீர்வைகள் விதிக்கப்படாதபோது உள்நாட்டு உற்பத்தியாளர் ஒருவர் 15 000 ரூபா பெறுமதியான இறக்குமதி உள்ளீடுகளைப் பயன்படுத்தி உற்பத்தி செய்த இருசக்கர வண்டிகளை ஓரலகு 25 000 ரூபா விலைக்கு விற்பனை செய்கிறார் எனக் கொள்க. அரசாங்கம் இருசக்கர வண்டி இறக்குமதி மீது 20% தீர்வை விதிக்கின்றதாயின், இறக்குமதி செய்யப்பட்ட இருசக்கர வண்டி அலகொன்று 30 000 ரூபாவுக்கு விற்கப்படுகிறது. இந்நிலைமையின் கீழ் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட இருசக்கர வண்டிகளை பயனுறுதி வாய்ந்த பாதுகாப்பு வீதம் யாது?
(1) 20% (2) 25% (3) 40% (4) 45% (5) 50%

40. தற்போது இலங்கையின் மூன்று பிரதான கைத்தொழில் ஏற்றுமதி பொருள் வகைகளாவன
(1) (a) புடவைகளும் ஆடைகளும் (b) உணவு குடிபானங்கள் மற்றும் புகையிலை (c) இரத்தினம், வைரம் மற்றும் ஆபரணங்கள்.
(2) (a) புடவைகளும் ஆடைகளும் (b) இறப்பர் உற்பத்திகள் (c) இரத்தினம், வைரம் மற்றும் ஆபரணங்கள்.
(3) (a) புடவைகளும் ஆடைகளும் (b) இறப்பர் உற்பத்திகள் (c) உணவு குடிபானங்கள் மற்றும் புகையிலை.
(4) (a) பெற்றோலிய உற்பத்திகள் (b) இறப்பர் உற்பத்திகள் (c) உணவு குடிபானங்கள் மற்றும் புகையிலை.
(5) (a) பெற்றோலிய உற்பத்திகள் (b) இறப்பர் உற்பத்திகள் (c) இரத்தினம், வைரம் மற்றும் ஆபரணங்கள்.

41. ஒரு பொருளாதாரத்தின் வர்த்தக மாற்று விகிதச் சுட்டெண் அடிப்படை வருடத்தில் நிலவிய 100 இலிருந்து 80 ஆக வீழ்ச்சியடைந்ததாகக் கருதுக. ஏற்றுமதி விலைச் சுட்டெண்ணிலும் இறக்குமதி விலைச் சுட்டெண்ணிலும் ஏற்பட்ட எம் மாற்றம் இதனை ஏற்படுத்தியிருக்கும்?

| | ஏற்றுமதி விலைச் சுட்டெண் மாற்றம் | இறக்குமதி விலைச் சுட்டெண் மாற்றம் |
|---|---|---|
| (1) | + 20 | 0 |
| (2) | − 40 | + 20 |
| (3) | − 10 | − 20 |
| (4) | − 12 | + 10 |
| (5) | − 4 | − 20 |



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

42. அவுஸ்திரேலிய அரசாங்கம் இலங்கை அரசாங்கத்திற்கு 50 மில்லியன் டொலர் பெறுமதியான உணவுப் பொருள்களையும் மருந்துகளையும் அன்பளிப்புச் செய்துள்ளது. இரட்டைப்பதிவு தத்துவத்தின் படி இலங்கையின் சென்மதி நிலுவையில் இவ்வன்பளிப்பு எவ்வாறு பதியப்படும்?

| | பெறுகைகள் | செலுத்தல்கள் |
|---|---|---|
| (1) | பொருள்கள் சேவை : பொருள்கள் | இரண்டாந்தர வருமானம் : அரசாங்கம் |
| (2) | இரண்டாந்தர வருமானம் : அரசாங்கம் | பொருள்கள் சேவை : பொருள்கள் |
| (3) | பொருள்கள சேவை : சேவைகள் | நிதிக்கணக்கு : ஏனைய முதலீடுகள் |
| (4) | பொருள்கள் சேவை : பொருள்கள் | மூலதனக் கணக்கு : மாற்றல்கள் |
| (5) | இரண்டாந்தர வருமானம் : அரசாங்கம் | நிதிக்கணக்கு : சொத்துப் பட்டியல் முதலீடுகள் |

43. நெகிழ்தன்மை வாய்ந்த நாணய மாற்றுவீத முறைமையின் கீழ் உள்நாட்டுப் பொருள்கள் மீதான வெளிநாட்டுக் கேள்வியில் ஏற்படும் ஓர் அதிகரிப்பானது
(1) உள்நாட்டு நாணயத்தின் கேள்வியைக் அதிகரித்து உள்நாட்டு நாணயத்தின் பெறுமதித் தேய்வை ஏற்படுத்தும்.
(2) உள்நாட்டு நாணயத்தின் கேள்வியைக் குறைத்து உள்நாட்டு நாணயத்தின் பெறுமதி உயர்வை ஏற்படுத்தும்.
(3) உள்நாட்டு நாணயத்தின் கேள்வியை அதிகரித்து உள்நாட்டு நாணயத்தின் பெறுமதி உயர்வை ஏற்படுத்தும்.
(4) உள்நாட்டு நாணயத்தின் கேள்வியைக் குறைத்து உள்நாட்டு நாணயத்தின் பெறுமதித் தேய்வை ஏற்படுத்தும்.
(5) உள்நாட்டு நாணயத்தின் நிரம்பலைக் குறைத்து உள்நாட்டு நாணயத்தின் பெறுமதித் தேய்வை ஏற்படுத்தும்.

44. சர்வதேச நாணய நிதியத்தின் பிரதான வகிபாகம் எது?
(1) நிலையான நாணயமாற்று வீத முறைமையினை உறுதிப்படுத்துதலும் சென்மதி நிலுவையில் நெருக்கடிகளை எதிர்கொள்ளும் நாடுகளுக்கு அவசர நிதி உதவிகளை வழங்குவதுமாகும்.
(2) சென்மதி நிலுவையை உறுதிப்படுத்தவும் சர்வதேச வர்த்தகத்தின் சமநிலையான வளர்ச்சியை உறுதிப்படுத்தவும் நீண்டகால முதலீடுகளை வழங்குவதாகும்.
(3) அங்கத்துவ நாடுகளுக்கு கடன் வழங்குவதன் மூலம் வறுமையை குறைத்து மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதாகும்.
(4) வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் சுதந்திரமான பாய்ச்சலுக்கான தடைகளை நீக்குதல்.
(5) பொருளாதார அபிவிருத்தி மற்றும் மீள் கட்டுமானத்திற்காக அங்கத்துவ நாடுகளுக்கு நீண்டகால நிதி வசதிகளை வழங்குதல்.

45. பின்வருவனவற்றுள் எது பொருளாதார வளர்ச்சியைக் குறைக்கும்?
(1) முதலீட்டில் ஏற்படும் ஒரு வீழ்ச்சி
(2) வெளிநாடுகளில் இருந்து வரும் குடியேறிகளின் எண்ணிக்கையில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு
(3) ஒரு தொழில்நுட்ப முன்னேற்றம்
(4) தொழிற்படையில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு
(5) சேமிப்பு வீதத்தில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு

46. அபிவிருத்தி என்பது
(1) மொத்த தேசிய வருமானத்தின் பேண்தகு அதிகரிப்பு ஆகும்.
(2) கிராமிய சனத்தொகையின் வருமான ஏற்றத்தாழ்வுகளை நீக்குதல் ஆகும்.
(3) பொருளாதார கட்டமைப்பு மாற்றங்களுடனான பொருளாதார வளர்ச்சி ஆகும்.
(4) நாட்டின் மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் அதிகரிப்பு ஆகும்.
(5) சராசரிக் குடிமகனின் வாழ்க்கைத் தரத்தில் ஏற்படும் முன்னேற்றம் ஆகும்.

47. தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தின் தகவல்களின்படி, பின்வரும் கொள்கைகளில் எது பெரும்பாலும் ஒரு நாட்டின் வருமானப் பரம்பலை மிகவும் ஒப்புரவு வாய்ந்ததாக மாற்றக் கூடும்?
(1) உணவு மற்றும் ஆடைகள் மீதான ஒரு பொது விற்பனை வரியைத் தாபித்தல்
(2) ஒரு விருத்தி முறை வருமான வரி முறைமையினைத் தாபித்தல்
(3) ஆடம்பரப் பொருள்கள் மீதான உள்நாட்டுப் பொருள் வரியை ஒழித்தல்
(4) எல்லா வருமானக் குழுக்கள் மீதான வரி வீதத்தை சமமான வீதங்களில் குறைத்தல்
(5) கல்வி, சுகாதாரம் என்பவற்றுக்கு வழங்கப்படும் மானியங்களைக் குறைத்தல்


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

48. தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத் தகவல்களின்படி, பின்வருவனவற்றுள் எந்தச் சேர்க்கை 2019 இல் இலங்கையின் தேசிய வறுமைக் குறிகாட்டியையும் உயர்வான தலைக்குரிய வறுமைக் குறிகாட்டியைக் கொண்ட மாவட்டத்தையும் சரியாகக் குறிக்கிறது?

| | தேசிய தலைக்குரிய வறுமைக் குறிகாட்டி (%) | உயர்வான தலைக்குரிய வறுமைக் குறிகாட்டியைக் கொண்ட மாவட்டம் |
|---|---|---|
| (1) | 9.2 | நுவரெலியா |
| (2) | 4.1 | முல்லைத்தீவு |
| (3) | 14.3 | முல்லைத்தீவு |
| (4) | 14.3 | கிளிநொச்சி |
| (5) | 16.0 | பதுளை |

49. பின்வருவனவற்றுள் ஒரு நாட்டின் தொழிற்படையின் பங்குபற்றல் வீதத்தை கணிப்பிடச் சரியானது எது?

(1) $\frac{\text{தொழில் புரியும் சனத்தொகை} - \text{தொழிலற்ற சனத்தொகை}}{\text{தொழில் புரியும் வயதுச் சனத்தொகை}} \times 100$

(2) $\frac{\text{தொழில் புரியும் சனத்தொகை} + \text{தொழிலற்ற சனத்தொகை}}{\text{தொழில் புரியும் வயதுச் சனத்தொகை}} \times 100$

(3) $\frac{\text{தொழில் புரியும் வயதுச் சனத்தொகை} - \text{தொழில் புரியும் சனத்தொகை}}{\text{பொருளாதார ரீதியில் இயங்கும் சனத்தொகை}} \times 100$

(4) $\frac{\text{தொழில் புரியும் வயதுச் சனத்தொகை}}{\text{மொத்த சனத்தொகை}} \times 100$

(5) $\frac{\text{பொருளாதார ரீதியில் இயங்கும் சனத்தொகை}}{\text{மொத்த சனத்தொகை}} \times 100$

50. கடந்த காலத்தில் இலங்கை சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) பதினாறு நிகழ்ச்சித்திட்டங்களில் ஈடுபட்டிருந்த போதிலும் அவற்றுள் பெரும்பாலானவற்றை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்த பதவியிலிருந்த அரசாங்கங்கள் தவறியமைக்கான பிரதான காரணம்

(1) அந்நிகழ்ச்சித் திட்டங்களில் உடன்பாடு காணப்பட்ட சீர்திருத்தங்களை மேற்கொள்வதில் போதியளவு அர்ப்பணிப்பு காட்டாமை.
(2) சர்வதேச மூலதனச் சந்தைகளில் போதியளவு நிதிகள் கிடைக்கத்தக்கதாக இருந்தமை.
(3) அந்நியச் செலாவணிப் பற்றாக்குறையிலிருந்து விடுபட செலாவணி பரிமாற்றல் உடன்படிக்கைகளில் பெரிதும் தங்கியிருந்தமை.
(4) IMF இன் உதவிகள் தேவைப்படாத அளவுக்கு வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் உட்பாய்ச்சல்கள் சீராக இடம்பெற்றமை.
(5) நெகிழ்தன்மை வாய்ந்த நாணயமாற்று வீத கொள்கையைக் கைக்கொண்டமையினால் நாட்டின் வெளிநாட்டு ஒதுக்குகளில் கணிசமானளவு முன்னேற்றம் ஏற்பட்டமை.


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

**අ.පො.ස (උ.පෙළ) විභාගය / க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2022 (2023)**

විෂය අංකය / பாட இலக்கம்: **21**

විෂයය / பாடம்: **பொருளியல்**

## ලකුණු දීමේ පටිපාටිය / புள்ளி வழங்கும் திட்டம்
## I පත්‍රය / பத்திரம் I

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01. | 3 | 11. | 5 | 21. | 3 | 31. | 3 | 41. | 4 |
| 02. | 3 | 12. | 1 | 22. | 4 | 32. | 4 | 42. | 2 |
| 03. | 1 | 13. | 5 | 23. | 1 | 33. | 2 | 43. | 3 |
| 04. | 4 | 14. | 3 | 24. | 2 | 34. | 1 | 44. | 1 |
| 05. | 3 | 15. | 4 | 25. | 2 | 35. | 5 | 45. | 1 |
| 06. | 5 | 16. | 2 | 26. | 2 | 36. | 4 | 46. | 5 |
| 07. | 4 | 17. | 4 | 27. | 1 | 37. | 2 | 47. | 2 |
| 08. | 4 | 18. | 1 | 28. | 5 | 38. | 3 | 48. | 3 |
| 09. | 2 | 19. | 2 | 29. | 2 | 39. | 5 | 49. | 2 |
| 10. | 3 | 20. | 5 | 30. | 4 | 40. | 3 | 50. | 1 |

✪ විශේෂ උපදෙස් / விசேட அறிவுறுத்தல் :

එක් පිළිතුරකට / ஒரு சரியான விடைக்கு 01 ලකුණු බැගින් / புள்ளி வீதம்

මුළු ලකුණු / மொத்தப் புள்ளிகள் 1 x 50 = 50



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2022(2023)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2022(2023)
General Certificate of Education (Adv. Level) Examination, 2022(2023)

ආර්ථික විද්‍යාව II
பொருளியல் II
Economics II

21 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள் :**

* உப பகுதி 'அ' இலிருந்து ஆகக்குறைந்தது இரண்டு வினாக்களையும் உப பகுதி 'ஆ' இலிருந்து ஆகக்குறைந்தது இரண்டு வினாக்களையும் தெரிவுசெய்து, ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
* வரைபுத்தாள் வழங்கப்படும்.

## உப பகுதி 'அ'

(இப்பகுதியிலிருந்து ஆகக்குறைந்தது இரண்டு வினாக்களைத் தெரிவுசெய்க.)

1. (i) "வளங்கள் வரையறையற்றதாகவும், இலவசமாகக் கிடைக்கத்தக்கதாகவும் இருப்பின் பொருளியல் என்னும் ஒரு விடயம் இருக்க முடியாது." இக் கூற்றை விளக்குக. (04 புள்ளிகள்)

(ii) தனித்தனி வரைபடங்களைப் பயன்படுத்தி பின்வரும் ஒவ்வொரு நிகழ்வுகளையும் ஒரு நாட்டின் உற்பத்தி இயல்தகவு வளையிகளில் எவ்வாறு காட்டலாம் எனச் சுருக்கமாக விபரிக்குக.

(அ) கல்வித் தரம் அதிகரித்தல்.

(ஆ) ஒரு நாட்டின் மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தி 8% இனால் சுருக்கமடைந்து தொழிலின்மை வீதம் அதிகரித்தல்.

(இ) சுகாதார சேவைகளுக்கு அரசாங்கம் அதிகம் செலவிடும் பொருட்டு பாதுகாப்புச் செலவினங்கள் குறைக்கப்படுகின்றது.

(ஈ) நீடித்த வரட்சி காரணமாக நீண்டகால பகுதிக்கு மின்சாரத் தடை ஏற்படல்.

(உ) கைத்தொழில் உற்பத்திக்குத் தேவையான அத்தியாவசிய மூலப்பொருள்களை இறக்குமதி செய்யத் தேவையான அந்நியச் செலாவணிக் கிடைப்பனவை மட்டுப்படுத்தல். (05 புள்ளிகள்)

(iii) தாராள சந்தைப் பொருளாதார முறைமை ஒன்றின் **ஐந்து** குறைபாடுகளைப் பெயரிடுக. (05 புள்ளிகள்)

(iv) ஒரு நாட்டின் பொருளாதார வளங்களை பயன்படுத்துவதில் தொழில்நுட்பத்தினதும் முயற்சியாளர்களினதும் வகிபாகத்தை விளக்குக. (06 புள்ளிகள்)

01.(i) - பொருளியல் என்பது அருமை மற்றும் தெரிவு பற்றிய ஒரு கற்கையாகும். எல்லாப் பொருளாதாரப் பிரச்சினைகளும் அடிப்படையில் தனிப்பட்ட தெரிவுகளைப் பற்றியதாகும். எதனைச் செய்ய வேண்டும் எதனைச் செய்யக் கூடாது என்பது பற்றி நபர்கள் மேற்கொள்ளும் தீர்மானங்களுடன் அது தொடர்பு பட்டுள்ளது. உண்மையில் தெரிவுடன் தொடர்பு படாத எதுவும் பொருளியல் இல்லை என்று கூறுவது தவறாகாது. (02 புள்ளிகள்)

- வளங்களை இலவசமாகவும் எல்லையற்ற அளவிலும் பெறமுடியுமாயின் தெரிவு செய்ய வேண்டிய தேவை ஏற்படாது. எல்லா நபர்களும் எந்த ஒரு பொருளையோ




Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

சேவையையோ தாம் விரும்பும் அளவில் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும். இந்நிலையில் தெரிவு பற்றிய விஞ்ஞானமாகிய பொருளியல் அவசியமற்றது

(02 புள்ளிகள்)


(மொத்தம் 04 புள்ளிகள்)

(ii) (அ) கல்வித்துறை அதிகரிப்பினால் தொழிற்படையின் விளைதிறன் அதிகரிக்கும் இதனால் உற்பத்தி இயல்தகவு வளையி வெளிப்புறமாக நகரும்




(சரியான விபரங்களுடன் உள்ள வரைபடத்திற்கு 01 புள்ளி)

(ஆ) மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வீழ்ச்சியினைக் காட்டுவது வளப்பயன்பாட்டின் விளைத்திறனின்மையேயன்றி வளத்திரட்சியில் ஏற்பட்ட வீழ்ச்சியல்ல. இதனை உற்பத்தி இயல்தகவு வளையியின் உள்ளே உற்பத்திப் புள்ளியை நகர்த்துவதன் மூலம் காட்டலாம். வரைபடத்தில் உற்பத்திப்புள்ளி A யிலிருந்து B நோக்கி நகரும்.





(சரியான விபரங்களுடன் உள்ள வரைபடத்திற்கு 01 புள்ளி)




Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

(இ) இதனால் உற்பத்தி இயல்தகவு வளையியில் எந்தப் பாதிப்பும் ஏற்படாது. பாதுகாப்புச் செலவுக்காக ஒதுக்கப்பட்ட வளங்களைக்குறைத்து சுகாதார சேவைகளுக்குப் பயன்படுத்தப்படும் வளங்கள் அதிகரித்துள்ளதால் உற்பத்தி இயல்தகவு வளையியின் மீது உற்பத்திச் சேர்க்கைப்புள்ளி A யிலிருந்து B நோக்கிய அசைவின் மூலம் இதனைக்காட்டலாம்.




(சரியான விபரங்கள் உள்ள வரைபடத்திற்கு 01 புள்ளி)

(ஈ)- வரட்சியின் காரணமாக மின்வெட்டு ஏற்படுவதன் மூலம் நாட்டின் வளத்திரட்சியின் வீழ்ச்சி நிலை காட்டப்படுகிறது. அதன் விளைவாக உற்பத்தி இயல்தகவு வளையி உட்புறமாக நகரும்





(சரியான விபரங்கள் உள்ள வரைபடத்திற்கு 01 புள்ளி)

(உ) மூலப்பொருட்களை இறக்குமதிக்காக வழங்கப்படும் அந்நியச் செலாவணியைக்குறைப்பதன் மூலம் காட்டப்படுவது நாட்டின் வளத்திரட்சியில் ஏற்படும் ஒரு வீழ்ச்சியாகும். இதன் விளைவாக உற்பத்தி இயல்தகவு வளையி உட்புறமாக நகரும்.


- இறக்குமதி உள்ளீடுகள் தேவைப்படாத ஒரு துறை காணப்படுமாயின் உற்பத்தி இயல்தகவு வளையி ஒரு அச்சில் மாத்திரம் உட்புறமாக அசையும்.



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/




அல்லது




(சரியான விபரங்களுடனான வரைபடத்திற்கு 01 புள்ளி)
(மொத்தம் 05புள்ளிகள்)

(iii) - தாராள சந்தை நடவடிக்கைகள் காரணமாக வருமானம் மற்றும் செல்வத்தின் நேர்க்கணிய ஏற்றத்தாழ்வுகளின் அளவு அதிகரிக்கலாம்.

- வியாபார நிறுவனங்கள் தனியுரிமைச் சக்தியைப் பெற்று விலைகளை அதிகரிப்பதன் மூலம் நுகர்வோரின் நலனில் தாக்கத்தை ஏற்படுத்தலாம்
- தாராள சந்தை நடவடிக்கைகளால்
- ஒன்றில் பொதுப்பொருட்களை நிரம்பல் செய்யாமல் விடலாம் அல்லது போதுமானளவில் நிரம்பல் செய்யாமல் இருக்கலாம்.
- கல்வி சுகாதாரம் போன்ற சமூகநலப் பண்டங்களை போதியளவில் நிரம்பல் செய்யாமல் விடலாம்.
- உற்பத்தியிலும் நுகர்விலும் ஏற்படும் எதிர்க்கணிய வெளிவாரிகளைச் சீராக்குவதில் தோல்வியடையலாம்.
- தகவல்களைப் பெறுவதை பொறுத்தும் சந்தை நடத்தையிலும் நிலவும் குறைபாடுகள் காரணமாக சந்தை ஒழுங்குபடுத்தலும் சிக்கல்களும் [illegible] இடம் பெறுவதுடன் தீவிரமான தளம்பல்களையும் எதிர்நோக்கலாம்
- தாராள சந்தையில் உள்ள ஒவ்வொரு வியாபார அலகும் முழுக்கவனமும் இலாபம் உழைக்க முற்படுவதால் தொழிலாளர்களின் பாதுகாப்பு சுகாதார நிபந்தனைகள் மற்றும் ஒழுக்க விழுமியங்களைத் தளர்வாக்க நேரிடும்.
- பேரினப் பொருளாதாரத்தில் நிலையற்ற தன்மை ஏற்படலாம்
- நிதிச் சந்தைகள் ஒழுங்குறுத்தல்கள் இன்றிச் செயற்படுவதால் தீவிரமான நிதியியல் உறுதியற்ற தன்மை ஏற்படுவதுடன் இவற்றுடன் சம்பந்தத் தொடர்புகளுமற்ற பில்லியன் கணக்கானவர்கள் பாதிக்கப்படக் கூடும்.

(ஒரு விடயத்திற்கு 01 புள்ளி வீதம் எவையேனும் ஐந்து விடயங்களுக்கு 05 புள்ளிகள்)


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

(iv) - தொழில்நுட்பம் என்பது மிகப்பெரும் அறிவுத்திரட்சியுடன் கருவிகளையும் தன்னகத்தே கொண்டுள்ளதுடன் இதன் மூலம் பொருள்களையும் சேவைகளையும் வினைத்திறனுடனும் புத்தாக்கத்துடனும் உற்பத்தி செய்வதற்காக பொருளாதார வளங்களை இலகுவாக ஒதுக்கீடு செய்ய முடியும்.

- தொழில்நுட்பத்தின் காரணமாக பொருள்கள் சேவைகளை உற்பத்தி செய்யவும் விநியோகம் செய்யவும் செலவிடப்படும் நேரம் மீதமாகும். இவ்வாறு மீதமடையும் காலத்தைத் தொழிலாளர்கள் வேறு பயன்மிகு நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதன் மூலம் உற்பத்தி நிறுவனத்தின் மொத்த இலாபம் அதிகரிக்கும்.

- தொழில்நுட்பத்தின் காரணமாக தொழிற்பிரிப்பும் சிறப்பியல்பும் அதிகரிக்க வாய்ப்பேற்படுவதுடன் வளப்பயன்பாடு மேலும் வினைத்திறனுடன் இடம்பெறப் பங்களிப்புச் செய்யும்.
- தொழில்நுட்பத்தின் விளைவாக தொழிலாளர்களுடனான தொடர்பாடல்கள் வினைத்திறனுடன் இடம் பெறுவதால் விளைதிறன் அதிகரிக்கும்
- வியாபாரத்திற்கும் வியாபார சுற்றுச் சூழலுக்கும் தேவையான புதிய தகவல்களைப் பெற தொழில்நுட்பத்தின் மூலம் வழிகிடைக்கும்.

(ஒரு விடயத்திற்கு 01 புள்ளி வீதம் ஏதேனும் மூன்று விடயங்களுக்கு 03 புள்ளிகள்)

முயற்சியாளர்கள்:

- தொழில்நுட்ப முன்னேற்றம் ஏற்பட்ட உடனேயே உற்பத்தியில் விரிவாக்கம் ஏற்பட்டு விடாது. முயற்சியாளர்கள் தொழில் நுட்ப மாற்றங்களை உற்பத்திச் செயன்முறையில் ஈடுபடுத்தினால் மாத்திரமே அது நிகழும்.
- பயன்படுத்தப்படாத வளங்கள் உழைப்பு மற்றும் மூலதனம் ஆகியவற்றை முயற்சியாளரே வினைத்திறனுடன் பயன்பாட்டுக்குட்படுத்துகின்றனர்.

- வியாபாரத்தின் ஒவ்வொரு துறைகளிலும் புத்தாக்கத்தை அறிமுகப்படுத்தி இருக்கின்ற வளங்களை வினைத்திறன் மிகுந்தவகையில் பயன்படுத்தி அதன் மூலம் உற்பத்தியை அதிகரிப்பதையும் முயற்சியாளரே மேற்கொள்கின்றனர்.

- தொழில் முயற்சியின் விளைதிறனை அதிகரிக்க முயற்சியாளர் பங்களிக்கின்றனர். உயர் வினைத்திறனுடைய புதிய நிறுவனங்களுடன் போட்டித்தன்மையை அதிகரித்து வினைத்திறன் குறைந்த நிறுவனங்கள் சந்தையிலிருந்து வெளியேறச் செய்வதன் மூலம் முயற்சியாளர்கள் பொருளாதாரத்தின் மொத்த விளைதிறன் அதிகரிக்க பெரும் பங்களிப்புச் செய்கின்றனர்.

(ஒரு விடயத்திற்கு 01 புள்ளி வீதம் ஏதேனும் மூன்று விடயங்களுக்கு (03 புள்ளிகள்)
(மொத்தம் 06 புள்ளிகள்)


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

2. (i) ஒரு நிரம்பல் வளையியை வரையும்போது நிலையாக இருப்பதாகக் கருதப்படுவது எது? (03 புள்ளிகள்)

(ii) சிகரட்டுக்கான விலைக் கேள்வி நெகிழ்ச்சி சுமார் –0.75 ஆகவுள்ளதாக ஆய்வுக் கற்கைகள் காட்டுகின்றன. தற்போது ஒரு சிகரட் பெட்டியின் விலை 1500 ரூபாவாயின், அத்துடன் அரசாங்கம் புகைபிடித்தலை 30% இனால் குறைக்க விரும்பினால் ஒரு பெட்டி சிகரட்டின் விலை எத்தனையாக இருக்க வேண்டும்? (05 புள்ளிகள்)

(iii) விலை தவிர்ந்த ஏனைய பங்கீட்டு முறைமைகள் மூன்றைக் குறிப்பிட்டு அவற்றை சுருக்கமாக விளக்குக. (06 புள்ளிகள்)

(iv) ஒரு பண்டத்தின் விலை அதிகரிக்கும்போது நுகர்வோர் அதற்கு குறைவாகக் கேள்வி எழுப்புவதேன் என விளக்குக. (06 புள்ளிகள்)

02. (i)
- உற்பத்திக்காரணிகளின் விலை
- எதிர்பார்க்கப்படும் எதிர்கால விலை
- நிரம்பலாளர்களின் எண்ணிக்கை
- தொழினுட்பம்
- இயற்கை வளங்கள்

(ஒரு விடயத்திற்கு 01 புள்ளி வீதம் ஏதேனும் மூன்று விடயங்களுக்கு (03 புள்ளிகள்)

(ii)
- விலைக்கேள்வி நெகிழ்ச்சிச் சூத்திரம்

- $\frac{\text{கேள்வித்தொகையின் \% மாற்றம்}}{\text{விலையின் \% மாற்றம்}}$ S = -0.75

(01 புள்ளி)

- விலை 1% இனால் மாற்றமடையுமாயின் கேள்வித்தொகை 0.75% இனால் மாற்றமடையும் என்பதே இதன் கருத்தாகும்.
- அவ்வாறாயின் கேள்வித்தொகை 1% இனால் மாற்றமடைய வேண்டுமாயின் விலை எத்தனை சதவீதத்தினால் மாற்றமடைய வேண்டும்?

- $\frac{(1.00\%)}{(0.75\%)} = \frac{100}{75} = \frac{4}{3} = 1\frac{1}{3}$

- தொகை 30 இனால் மாற்றமடைய வேண்டுமாயின் விலை எத்தனை சதவீதத்தினால் மாற்றமடைய வேண்டும்?

$30 \times 1\frac{1}{3} = 30 \times \frac{4}{3} = 40\%$

அல்லது

- $\frac{(1.00\%)}{(0.75\%)}$ 30% $\frac{100}{75} \times 30 = 40\%$

(02 புள்ளிகள்)



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

- ஒரு சிகரட் பெக்கட்டின் விலை ரூபா 1500
- கேள்வித்தொகையை 30% இனால் குறைக்க வேண்டுமாயின் ஒரு சிகரட் பெக்கட்டின் விலை 40 இனால் அதிகரிக்க வேண்டும். அவ்வாறாயின்
- சிகரட் பெக்கட்டின் புதிய விலை எவ்வளவாக இருக்க வேண்டும்

- $1500 \times \frac{140}{100} =$ ரூபா 2100 (02 புள்ளிகள்)

(iii) - வரிசை முறை: இதன் போது வரிசையில் நின்று பொருளைப் பெறவேண்டியுள்ளதுடன் வரிசையில் வருவோரின் வரிசைக்கிரமத்தின்படி பொருள் தரப்படும். எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பௌதீகரீதியில் ஒருவர் வரிசையில் நின்றேயாகவேண்டும் என்று கருதப்படுவதில்லை சிலவேளைகளில் காத்திருப்புப்பட்டியலில் பெயரைப் பதிவு செய்வதன் மூலம் மிகைக்கேள்வி நிலவும் பொருளை பட்டியலின் வரிசைக்கிரமப்படி விநியோகிக்கலாம்

பங்கீட்டு அட்டைகளை விநியோகித்தல்: தரப்பட்ட ஒரு பொருளின் நிச்சயிக்கப்பட்ட அளவை ஒரு கிழமைக்கோ ஒரு மாதத்திற்கோ பெறத்தக்கவகையில் தனிநபருக்கோ அல்லது குடும்பத்திற்கோ வழங்கப்படும் ஒரு அனுமதிப்பட்டை அல்லது சீட்டு ஆகும்.

- தெரிந்தவர்களுக்கு பெற்றுக் கொடுத்தல்: குறித்த பொருளுக்கு மிகைக் கேள்வி நிலவும் போது வியாபாரிகள் தமக்குத் தெரிந்தவர்களுக்கு அவற்றைப் பங்கீடுசெய்வதைக் காணலாம். நண்பர்கள் நீண்ட கால வாடிக்கையாளர்கள் வியாபாரியால் விற்க முடியாத நிலையில் உள்ள பொருள்களையும் சேர்த்து வாங்க விரும்பும் வாடிக்கையாளர்கள் போன்றோர் இவ்வகையில் தெரிந்தவர்களாகக் கருதப்படுவர்.

- கறுப்புச் சந்தை: சந்தையால் தீர்மானிக்கப்படும் விலைகளின் கீழ் சட்டவிரோதமாக விற்பனையில் ஈடுபடும் சந்தை கறுப்புச் சந்தை எனக்கருதலாம். உயர்ந்தபட்ச விலை எல்லை இச்சந்தையில் சட்டவிரோதமான முறையில் மீறப்படும். சந்தையின் சமநிலையை விடக் கூடுதலான விலையைச் செலுத்த தயாராகவுள்ள நுகர்வோர்கள் இருப்பதனால் சட்ட விரோதமான ஒரு விலையில் விற்பனை செய்யப்பட தூண்டுதல் உள்ளது.

- சந்தர்ப்பத்திற்கேற்ப பங்கீடு செய்தல் (Chance Allocation) : செய்தல் மேற்கூறப்பட்ட முறைமைகளைப் பின்பற்றாதவிடத்து பற்றாக்குறையாகவுள்ள பொருள்களை விநியோகமானது தற்செயலான வகையில் மேற்கொள்ளப்படும். உதாரணமாக மிகைக் கேள்வியுள்ள பொருள்களை யாரும் எதிர்பாராதவாறு ஒரே தடவையில் சில சந்தைகளில் விற்பனை செய்யப்படலாம். குறித்த அந்தச் சந்தர்ப்பத்தில் சந்தையில் இருக்கும் வாடிக்கையாளருக்கு அச்சந்தர்ப்பத்தினால் நன்மை கிட்டும்.

(ஒரு விடயத்திற்கு 02 புள்ளிகள் வீதம் ஏதேனும் மூன்று விடயங்களுக்கு மொத்தம் 06 புள்ளிகள்)

(iv) - பொருளின் விலைக்கும் கேள்வி எழுப்பப்படும் தொகைக்கும் இடையில் எதிர்க்கணியத் தொடர்பு உண்டு. கேள்வி விதியின் மூலம் இது பற்றியே வெளிப்படுத்தப்படுகிறது. பொருளின் விலை உயரும் போது நுகர்வோர் அப்பொருளுக்கு குறைந்த கேள்வியை ஏற்படுத்துவது இரண்டு காரணங்களினாலாகும்.

(1) பதிலீட்டு விளைவு (2) வருமான விளைவு என்பவற்றினாலாகும். (02 புள்ளிகள்)


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

- பதிலீட்டு விளைவு: ஏனையன மாறாநிலையில் ஒரு பொருளின் விலை உயருமாயின் அப்பொருளின் சார்புவிலை அதிகரிக்கும். சார்பளவில் விலை அதிகரித்த பொருளின் கொள்வனவைக் குறைத்து சார்பளவில் விலை குறைவாகவுள்ள பதிலீட்டுப்பொருள்களை அதிகளவில் கொள்வனவு செய்யத் தூண்டப்படும்

(02 புள்ளிகள்)

- வருமான விளைவு: ஏனையன மாறாநிலையில் ஒரு பொருளின் விலை உயருமாயின் நுகர்வோனின் மெய்வருமானம் (பணவருமானத்தின் கொள்வனவுச்சக்தி) வீழ்ச்சியடையும். இதனால் முன்னர் கொள்வனவு செய்த எல்லாப் பொருள்களையும் இப்போது கொள்வனவு செய்வது கடினமாகும். இதனால் சாதாரண பொருள்களின் கொள்வனவுத் தொகையைக் குறைப்பர்.

(02 புள்ளிகள்)

**மொத்தம் 06 புள்ளிகள்**

3. (i) கைத்தொழில் உற்பத்திப் பொருள்களின் விலைகளை விட விவசாய விளைபொருள்களின் விலைகள் அதிகம் தளம்புவதேன்? (06 புள்ளிகள்)

(ii) ஒரு தளவிலை (floor price) உற்பத்தியாளருக்கு நன்மை தருமாயின், ஒரு தளவிலை பொருளாதார மிகையினை குறைப்பது ஏன்? ஒரு வரைபடத்தைப் பயன்படுத்தி உமது விடைகளை விளக்குக. (06 புள்ளிகள்)

(iii) ஒரு போட்டிச் சந்தையில் விற்பனை செய்யப்படும் பொருள் ஒன்றின் கேள்வி, நிரம்பல் வளையிகள் பின்வரும் சமன்பாடுகளால் பிரதிநிதித்துவப்படுத்தப்படுவதாகக் கருதுக.

கேள்வி : $Q_D = 720 - 4P$ நிரம்பல் : $Q_S = -120 + 2P$

(அ) இப்பொருளின் சமநிலை விலை மற்றும் தொகையைக் காண்க. (02 புள்ளிகள்)

(ஆ) இப்போது அரசாங்கம் இப்பொருளின் உற்பத்தியாளர்களுக்கு ஓரலகிற்கு 15 ரூபா மானியம் வழங்கத் தீர்மானிப்பதாகக் கருதுக.

(a) மானியத்தின் பின்னர் கொள்வனவாளன் செலுத்தும் விலை என்ன? (03 புள்ளிகள்)

(b) மானியத்தின் பின்னர் நிரம்பலாளனுக்கு கிடைக்கும் விலை யாது? (03 புள்ளிகள்)

03. (i) - கைத்தொழில் பொருள்களுக்கான கேள்வியுடன் ஒப்பிடுகையில் விவசாய விளைபொருள்களுக்கான கேள்வியானது விலை மற்றும் வருமானம் ஆகிய இரண்டையும் தொடர்பிலும் நெகிழ்வற்றதாகக் காணப்படுகிறது. கேள்வி நெகிழ்வற்றதாகக் காணப்படுவதால் நிரம்பலில் ஏற்படும் மாற்றங்கள் விலையில் சார்பளவில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்துகின்றன.

- கைத்தொழில் பொருட்களைப் போலன்றி விவசாயப் பொருள்கள் விளைச்சலுக்கு அதிக காலம் எடுப்பதால் குறுங்காலத்தில் விவசாயப் பொருள்களின் நிரம்பல் நெகிழ்ச்சியற்றதாகும். விலை அதிகரிக்கும் போது விரைவாக நிரம்பலை அதிகரிக்கும் ஆற்றல் விவசாயிகளுக்குக் கிடையாது. புதிதாகப் பயிர்வளர்த்து அறுவடை மேற்கொள்ள 1-5 ஆண்டுகள் ஆகலாம்.

- செய்தல்

- கைத்தொழில் பொருள்களுடன் ஒப்பிடுகையில் குறுங்கால வருடாந்தப் பயிர்களின் சந்தைவிலையுடன் அவற்றின் உற்பத்தியின் உணர்திறன் மிகவும் குறைந்த மட்டத்தில் உள்ளது. அப்பொருள்களை உற்பத்தி செய்வது தொடர்பான தீர்மானங்கள் குறித்த சந்தர்ப்பத்தில் அவற்றுக்கு நிலவும் விலைகள் அவ்வாறே தொடரும் என்ற எடுகோளின் அடிப்படையிலேயன்றி அறுவடை கிடைக்கும் போது சந்தையில் நிலவக்கூடிய விலைகளின் அடிப்படையில் அல்ல. இதன் பிரதிபலனாக பாரிய விலைத்தளம்பல்கள் உருவாகும். சில விவசாயிகள் தமது தமது



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

விளைச்சலை விளைநிலத்திலேயே கைவிட்டுச் செல்லுமளவுக்கு அவற்றின் விலைகள் வீழ்ச்சியடையக் கூடும்.

- கைத்தொழில் பொருள்களைப் போலன்றி உற்பத்தியாளரின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட இயற்கைக் காரணிகளால் (வானிலை கிருமித்தொற்றுகள்) விவசாய விளை பொருள்களின் நிரம்பலானது தீவிரமான தளம்பல்களுக்கு உட்படக் கூடியதாகும். சிறந்த வானிலை நிலவியதன் காரணமாக எதிர்பாராத வகையில் பாரிய அறுவடை பெறப்பட்டால் சந்தைவிலையானது பாரியளவில் வீழ்ச்சியடையும். பயிர்களில் ஏற்படும் நோய்த்தாக்கங்கள் மற்றும் பீடைத் தாக்கங்கள் காரணமாக நிரம்பலில் தீவிரமான தளம்பல்கள் ஏற்படும் போது விலையில் நிலையற்ற தன்மை ஏற்படும்.
- கைத்தொழில் பொருள்களைப் போலன்றி விவசாயப் பொருள்களை நீண்டகாலம் வைத்திருக்க முடியாத இலகுவில் கெட்டுவிடும் தன்மை கொண்டவையாகும். இவற்றின் கையிருப்புகளைப் பேணுவது கடினமான காரியமென்பதால் இலகுவில் விலைத்தளம்பல்களுக்கு உட்படத்தக்கவையாகும்.

(ஒரு விடயத்திற்கு 02 புள்ளிகள் வீதம் ஏதேனும் மூன்று விடயங்களுக்கு 06 புள்ளிகள்)

(ii) - சமநிலை விலையை விடக் கூடுதலான ஒரு விலையை குறைந்தபட்ச விலையாக அரசாங்கம் நிர்ணயித்தால் சமநிலையை விடக் கூடிய ஒரு விலையைப் பெற இயலுமென்பதால் உற்பத்தியாளருக்கு நன்மை கிட்டும். இதன்போது உற்பத்தியாளர் மிகை அதிகரிப்பதுடன் நுகர்வோன் மிகை வீழ்ச்சியடையும்.

(02 புள்ளிகள்)


- சந்தை விலையை விடக் கூடுதலான ஒரு விலையை குறைந்தபட்ச விலையாக அறிவித்தால் சந்தையின் கேள்வித்தொகையை விட நிரம்பல் செய்யப்படும் தொகை அதிகரிக்கும். எனினும் அரசாங்கம் அறிவித்த குறைந்த பட்ச விலையை விடக் குறைவாக சந்தைவிலை வீழ்ச்சியடைய வாய்ப்பில்லை. குறைந்த பட்ச விலையின் கீழ் நுகர்வோர் Q2 தொகைக்கு மட்டுமே கேள்வியை ஏற்படுத்துவதால் உற்பத்தியாளரும் நிரம்பலை அதே மட்டத்தில் வரையறுக்க நேரிடும். இதன் விளைவாக வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளபடி C+E அளவினால் நலன் இழப்பு ஏற்படும.

(02 புள்ளிகள்)

- குறைந்தபட்ச விலையினால் பொருளாதார மிகையில் ஏற்படும் இழப்பைப் பின்வரும் வரைபடம் காட்டுகிறது.-

(விலை ரூபா)


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/




குறைந்தபட்ச விலைக்கு முன் பொருளியல் மிகை = A+B+C+D+E+F

குறைந்தபட்ச விலைக்கு பின் பொருளியல் மிகை = A+B+D+F

குறைந்தபட்ச விலையினால் பொருளியல் மிகையின் வீழ்ச்சி = C+E

(பொருளியல் மிகை மாற்றங்களைச் சரியாகக் காட்டும் வரைபடத்திற்கு 02 புள்ளிகள்)

(மொத்தம் 06 புள்ளிகள்)

(iii) (அ)- $Q_D = Q_S$

- $720 - 4P = -120 + 2P$

$840 = 6P$

$140 = P$ சமநிலை விலை (01 புள்ளி)

- $Q = 720 - 4(140)$
- $Q = 720 - 560 = 160$ சமநிலைத் தொகை (01 புள்ளி)

(ஆ) (a) மானியத்தின் பின் கொள்வனவாளர் செலுத்தும் விலை;

- கொள்வனவாளர் செலுத்தும் விலை ($P_b$) = நிரம்பலாளரின் விலை ($P_s$) − மானியம்
- நிரம்பலாளரின் விலை ($P_s$) = கொள்வனவாளர் செலுத்தும் விலை ($P_b$) + மானியம்

(01 புள்ளி)

$720 - 4P_b = -120 + 2P_s$

$720 - 4P_b = -120 + 2(P_b + 15)$ (01 புள்ளி)

$720 - 4P_b = -120 + 2P_b + 30$

$720 + 120 - 30 = 4P_b + 2P_b$

$810 = 6P_b$

$135 = P_b$; கொள்வனவாளர் செலுத்தும் விலை (01 புள்ளி)

(b)- நிரம்பலாளர் பெறும் விலை = கொள்வனவாளர் செலுத்தும் விலை ($P_b$) + மானியம்

(01 புள்ளி)

- நிரம்பலாளர் பெறும் விலை = 135 + 15 = 150 (02 புள்ளிகள்)

(மொத்தம் 06 புள்ளிகள்)

(சமன்பாடுகளைப் பயன்படுத்தாமல் சரியான வரைபடங்களைப் பயன்படுத்தி விடைகள் பெறப்பட்டிருப்பின் புள்ளிவழங்கப்பட வேண்டும்.)



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

4. (i) குறைந்து செல்லும் அளவுத்திட்ட விளைவிற்கும் ஒரு மாறுங் காரணியின் குறைந்து செல்லும் விளைவிற்கும் இடையிலான வேறுபாட்டை விளக்குக. (04 புள்ளிகள்)

(ii) "ஜயந்தன் என்பவர் தற்போது சட்ட ஆலோசனைச் சேவை நிறுவனமொன்றில் சட்டத்தரணியாகப் பணிபுரிகிறார். அதிலிருந்து சம்பளமாக மாதாந்தம் 250 000 ரூபாவை உழைக்கிறார். அவர் சொந்தமாக ஒரு சட்ட ஆலோசனைச் சேவை நிறுவனத்தை ஆரம்பிக்க உத்தேசிக்கிறார் அதன் மூலம் மாதாந்தம் 300 000 ரூபா வருமானம் உழைக்கலாமென எதிர்பார்க்கிறார். அவரது நிறுவனத்தை நடாத்திச் செல்ல அவருக்கு அலுவலகமொன்றும் எழுதுவினைஞரும் தேவை. அவர் அலுவலகமொன்றை 50 000 மாத வாடகைக்குப் பெறலாம். மேலும் அவர் 40 000 மாத சம்பளத்தில் ஒரு எழுதுவினைஞரையும் வேலைக்கமர்த்த முடியும்."

இத்தரவுகள் சரியாக இருப்பின் ஜயந்தனின் சட்ட ஆலோசனை நிறுவனம் ஒரு பொருளியல் இலாபத்தை உழைக்க முடியுமா? உமது விடையை விளக்குக. (04 புள்ளிகள்)

(iii) ஒரு நிறைபோட்டிக் கைத்தொழிலின் நான்கு பிரதான பண்புகளைக் கூறுக. (04 புள்ளிகள்)

(iv) நெல்லுக்கான சந்தை நிறைபோட்டித் தன்மை கொண்டதாகக் கருதுக. இச்சந்தையில் உள்ள நிறுவனங்கள் நெல்லை உற்பத்தி செய்த போதிலும் தற்போது அவை பொருளியல் நட்டத்தை எதிர்கொள்கின்றன.

(அ) நிறுவனத்தின் சராசரி மொத்தச் செலவு (ATC), சராசரி மாறுஞ் செலவு (AVC), மற்றும் எல்லைச் செலவு (MC) என்பவற்றுடன் இந்நிலையின்போது நிலவும் நெல்லுக்கான சந்தை விலையை ஒப்பிடுக. (03 புள்ளிகள்)

(ஆ) தற்போது இந்நிலைமையானது சந்தையிலும் உற்பத்தி நிறுவனத்திலும் பிரதிபலிக்கும் விதத்தை அருகருகே இரு வரைபடங்களை வரைந்து காட்டுக. (05 புள்ளிகள்)

04.(i) - குறைந்து செல்லும் அளவுத்திட்ட விளைவு விதியானது சகல உள்ளீடுகளும் மாறும் உள்ளீடுகளாகக் காணப்படும் நீண்ட காலத்திலேயே தொழிற்படும். மாறும் உள்ளீடொன்றின் குறைந்து செல்லும் விளைவானது நிலையான உள்ளீடுகளை மாற்றமின்றி வைத்துக்கொண்டு மாறும் உள்ளீடுகளை மாத்திரம் அதிகரிக்கக் கூடிய குறுங்காலத்திலேயே தொழிற்படும். (02 புள்ளிகள்)

- நிலையான உள்ளீடுகளை (தொழிற்சாலையின் அளவினை) அதிகரிக்கும் போது விளைத்திறனில் ஏற்படும் மாற்றத்தை குறைந்து செல்லும் அளவுத்திட்ட விளைவு காட்டுகிறது. மாறும் உள்ளீட்டின் குறைந்து செல்லும் விளைவானது தரப்பட்ட நிலையான உள்ளீட்டுத் தொகையுடன் மாறும் உள்ளீடொன்றை அதிகரிக்கும் போது மாறும் உள்ளீட்டின் விளைத்திறனில் ஏற்படும் மாற்றத்தைக் காட்டுகிறது. (02 புள்ளிகள்)

(ii) பொருளியல் இலாபம் = மொத்த வருவாய் - மொத்த பொருளியல் செலவு (அமையச் செலவு)

- மொத்த வருவாய் = ரூபா 300,000
- மொத்த செலவு = நேரடிச் செலவுகள் + உள்ளார்ந்த செலவுகள்

நேரடிச் செலவுகள் = வாடகை + எழுதுவினைஞரின் சம்பளம்

= 50,000 + 40,000 = 90,000

உள்ளார்ந்த செலவுகள் = முன்னைய தொழிலில் பெற்றவருமானம் (இழக்கப்படும் சம்பளம்)

= ரூபா 250,000

- மொத்த செலவு = 90,000 + 250,000 = 340,000

(02 புள்ளிகள்)



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

- பொருளியல் இலாபம்= மொத்த வருவாய் – மொத்த செலவு
- பொருளியல் இலாபம = 300,000 – 340,000 = – 40,000
- மொத்த வருவாயை விட மொத்தச் செலவு அதிகமாகையால் பொருளியல் இலாபம் உழைக்க முடியாது.

(02 புள்ளிகள்)

(iii) நிறைவுபோட்டித் தொழிலின் பிரதான பண்புகள்

- கொள்வனவாளரும் விற்பனையாளரும் பெரும் எண்ணிக்கையில் காணப்படல்
- பொருளியல் ஓரினத்தன்மை வாய்ந்த பொருள்கள் உற்பத்தி செய்யப்படல்.
- தடையற்ற பிரவேச வெளியேற்ற சுதந்திரம்.
- கொள்வனவாளரும் விற்பனையாளரும் சந்தை பற்றிய பூரண அறிவுடையவர்களாகக் காணப்படல்.

(ஒரு விடயத்திற்கு தலா 01 புள்ளி வீதம் நான்கு விடயங்களுக்கு 04 புள்ளிகள்)

(iv) (அ)- நெல் சந்தையில் உள்ள நிறுவனங்கள் பொருளியல் நட்டமடைந்த போதிலும் தொழிலில் தொடர்ந்து ஈடுபடுமாயின் அவற்றின் மொத்தச் செலவு சந்தை விலையை விட உயர்வாக இருக்கவேண்டும். (01 புள்ளி)


- நெல் சந்தையில் உள்ள நிறுவனங்கள் பொருளியல் நட்டமடைந்த போதிலும் தொழிலில் தொடர்ந்து ஈடுபடுமாயின் அவற்றின் சராசரி மாறும் செலவானது சந்தைவிலையை விடக் குறைவாக இருக்க வேண்டும். சில வேளைகளில்



Download all Past Papers>> https://bookbeekid.com/resource/past-papers/

நிறுவனங்கள் தமது சராசரி மாறுஞ்செலவு சந்தைவிலைக்குச் சமமாகவுள்ள (தொழில் நிறுத்தப் புள்ளி) நிலையிலும் உற்பத்தியில் தொடர்ந்து ஈடுபடலாம். விரைவில் சந்தை நிலைமைகள் சாதகமாக மாறும் என்ற எதிர்பார்க்கையில் அவ்வாறு நிகழலாம். (01 புள்ளி)

- நட்டமைடையும் போதிலும் உற்பத்தியில் தொடர்ந்து ஈடுபடுவது இலாப உச்சப்படுத்தல் (நட்டத்தை இழிவுபடுத்தல்) விதிக்கு (MC=MR) அமைவாக என்பதால் நிறுவனங்களின் எல்லைச் செலவு சந்தை விலைக்குச் சமப்பட வேண்டும். (01 புள்ளி)

(ஆ) வரைபடம்




(சந்தையைச் சரியாகக் காட்டும் வரைபடத்திற்கு தலா 01 புள்ளி. நிறுவனத்தைச் சரியாகக் காட்டும் வரைபடத்திற்கு 02 புள்ளிகள். பொருளியல் நட்டத்தைச் சரியாகக் காட்டுவதற்கு 02 புள்ளிகள். மொத்தம் 05 புள்ளிகள்)


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

5. (i) பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்தி, மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் தலைக்குரிய மொத்த உள்நாட்டு உற்பத்தி என்பவற்றை வரைவிலக்கணப்படுத்துக. (03 புள்ளிகள்)

(ii) மொத்த உள்நாட்டு உற்பத்தியானது ஒரு பொருளாதாரத்தின் எல்லா உற்பத்தி நடவடிக்கைகளினதும் ஒரு மிகை மதிப்பீடாக அமையுமா அல்லது குறை மதிப்பீடாக அமையுமா? உமது விடையை விளக்குக. (04 புள்ளிகள்)

(iii) பின்வரும் அட்டவணை ஒரு வீட்டுத்துறையின் நுகர்வுத் தொழிற்பாட்டைக் காட்டுகிறது.

| செலவிடத்தக்க வருமானம் (ரூபா) | நுகர்வுச் செலவீடு (ரூபா) |
|---|---|
| 0 | 3 000 |
| 3 000 | 5 400 |
| 6 000 | 7 800 |
| 9 000 | 10 200 |
| 12 000 | 12 600 |
| 15 000 | 15 000 |
| 18 000 | 17 400 |

(அ) செலவிடத்தக்க வருமானம் ரூபா 9 000 இலும் ரூபா 18000 இலும் வீட்டுத்துறையின் சராசரி நுகர்வு நாட்டத்தையும் (APC) இச் செலவிடத்தக்க வருமான வீச்சினுள் எல்லை நுகர்வு நாட்டத்தையும் (MPC) கணிப்பிடுக. (04 புள்ளிகள்)

(ஆ) வீட்டுத்துறையின் நுகர்வு தொழிற்பாட்டின் சமன்பாட்டையும் சேமிப்புத் தொழிற்பாட்டின் சமன்பாட்டையும் எழுதுக. (04 புள்ளிகள்)

(இ) தரப்பட்ட தகவல்களைப் பயன்படுத்தி வீட்டுத்துறையின் நுகர்வுத் தொழிற்பாட்டையும் சேமிப்புத் தொழிற்பாட்டையும் ஒரு வரைபுத்தாளில் வரைந்து காட்டுக. (05 புள்ளிகள்)

05. (i) • குறித்த ஒரு காலப்பகுதியில் (பொதுவாக ஒரு காலாண்டு அல்லது ஒரு ஆண்டு) ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்படும் இறுதிப் பொருட்கள் சேவைகளின் சந்தைப் பெறுமதியை அக்காலப்பகுதியில் நிலவிய விலைகளின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படும் போது அது பெயரளவிலான மொத்த உள்நாட்டு உற்பத்தி எனக் கூறப்படும். (01 புள்ளி)

அல்லது

குறித்த ஒரு காலப்பகுதியில் (பொதுவாக ஒரு காலாண்டு அல்லது ஒரு ஆண்டு) ஒரு பொருளாதாரப் பிரதேசத்தின் வதிவாளராகக் காணப்படும் சகல உற்பத்தி அலகுகளும் உருவாக்கிய கூட்டப்பட்ட பெறுமதிகளின் கூட்டுத்தொகையை அக்காலப்பகுதியின் நிலவும் விலைகளின் அடிப்படையில் கணிப்பீடு செய்து அதனுடன் மானியங்களைக் கழித்து வரிகளைக் கூட்டிப் பெறப்படும் பெறுமதி பெயரளவிலான மொத்த உள்நாட்டு உற்பத்தி எனக்குறிப்பிடப்படும். (01 புள்ளி)

• மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தி என்பது குறித்த ஒரு ஆண்டின் பெயரளவிலான மொத்த உள்நாட்டு உற்பத்தியை விலைமட்டத்தில் ஏற்பட்ட மாற்றங்களுடன் சீராக்கம் செய்து பெறப்படும் பெறுமதியாகும். (01 புள்ளி)

• தலைக்குரிய மொத்த உள்நாட்டு உற்பத்தி என்பது பெயரளவிலோ மெய்நியதியிலோ கணிக்கப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியை அந்நாட்டின் நடு ஆண்டு சனத்தொகையினால் பிரிப்பதன் மூலம் பெறப்படும் பெறுமதியாகும். (01 புள்ளி)


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

(ii) மிகை மதிப்பீடு

- ஒருவராலும் விலை செலுத்தப்படாத சுற்றுச் சூழல் மாசடைதல் உயிரினங்களுக்கு விளைவிக்கப்படும் தீங்குகள் போன்ற சுற்றாடல் வெளிவாரிகள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் உள்ளடக்கப்படுவதில்லை.
- சுற்றுச் சூழல் மாசடைதலின் தீய விளைவுகள் சூழல் மாசடைதலைக் குறைப்பதற்காக மேற்கொள்ளப்படும் செலவுகள் மொத்த உள்நாட்டு உற்பத்தியிலிருந்து கழிக்கப் படுவதில்லை.
- வளத்திரட்சி தேய்வடைதல் உயிர் பல்லினத்தன்மை அற்றுப்போதல் போன்ற ஒரு நாட்டின் சொத்துக்களின் பெறுமதியில் ஏற்படும் மாற்றங்கள் மொத்த உள்நாட்டு உற்பத்திப் புள்ளிவிபரங்களில் உள்ளடக்கப்படுவதில்லை.
- நன்மை பயப்பவை (goods) தீங்கிழைப்பவை (bads) ஆகிய இரு வகைகளையும் மொத்த உள்நாட்டு உற்பத்தி கவனத்திற் கொள்கிறது. குறித்த ஒரு நாட்டின் பூமியதிர்ச்சி அல்லது சுனாமி போன்ற இயற்கை அனர்த்தத்தின் பின்னர் மேற்கொள்ளப்படும் மீள் கட்டுமானங்கள் காரணமாக அந்நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி அதிகரிக்கும். ஒருவர் நோய்வாய்ப்பட்ட பின்னர் அதிலிருந்து குணமடையும் பொருட்டு மேற்கொள்ளும் செலவுகளால் மொத்த உள்நாட்டு உற்பத்தி அதிகரிக்கும். ஆனால் உள்நாட்டு உற்பத்தி அதிகரித்தாலும் பூமியதிர்ச்சி ஏற்படுவதையோ நோய்வாய்ப்படுவதையோ எவரும் நல்லவிடயமாகக் கருத முடியாது.

(ஒரு விடயத்திற்கு 02 புள்ளிகள் வீதம் ஏதேனும் இரண்டு விடயங்களுக்கு மொத்தம் 04 புள்ளிகள்)

குறை மதிப்பீடு

- ஒழுங்கமைக்கப்படாத சந்தைகளில் மேற்கொள்ளப்படும் [illegible] கொடுக்கல்வாங்கல்கள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கவனத்திற் கொள்ளப்படுவதில்லை. ஒருவர் தனது வீட்டில் மேற்கொள்ளும் சுத்திகரிப்பு உணவு சமைத்தல் குழந்தைவளர்ப்பு போன்ற விலைபெறுமதியற்ற சேவைகள் கணக்கிற் கொள்ளப்படுவதில்லை.

- மறைந்திருக்கும் அல்லது முறைசாராப் பொருளாதாரத்தில் இடம்பெறும் பல்வேறு [illegible] பொருளாதாரச் செயற்பாடுகள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் போதியளவு வெளிப்படுத்தப்படுவதில்லை. சட்டவிரோதமாக நடைபெறும் பொருள்கள் சேவைகளின் உற்பத்தி நடவடிக்கைகள் வரிவிதிப்பு மற்றும் ஒழுங்குறுத்தல் நடவடிக்கைகளிலிருந்து தவிர்க்கும் பொருட்டு உரிய அதிகாரிகளுக்கு அறிக்கையிடப்படாத பொருளாதார நடவடிக்கைகள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் உள்ளடக்கப்படுவதில்லை.

- தொழில்நுட்ப முன்னேற்றத்தின் நன்மைகளை திருப்தியடையக் கூடிய மட்டத்தில் உள்ளடக்க மொத்த உள்நாட்டு உற்பத்திப் புள்ளிவிபரங்கள் தவறிவிடுகின்றன. இணையவசதிகள் மூலம் நமக்குக் கிடைக்கும் நன்மைகளையும் வசதிகளையும் உத்தியோகபூர்வத் தரவுகள் போதியளவில் வெளிப்படுத்துவதில்லை. இணையத்தினூடாக இலவசமாகக் கிடைக்கும் சேவைகளும் மென்பொருள்களும் (வீடியோபடங்கள் சமூக ஊடக வலைப்பின்னல் உற்பத்திபற்றிய தகவல்கள் விக்கிபீடியா) தேசிய கணக்குகளில் போதியளவில் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்படுவதில்லை.

(ஒரு விடயத்திற்கு 02 புள்ளிகள் வீதம் ஏதேனும் இருவிடயங்களுக்கு மொத்தம் 04 புள்ளிகள்


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

(iii) (அ) ரூபா. 9,000 வருமான மட்டத்தில் சராசரி நுகர்வு நாட்டம் (APC)

$$APC = C/Y_d = 10200/9000 = 102/90 = 1.13$$

(01 புள்ளி)

- ரூபா. 18,000 வருமான மட்டத்தில் மதிப்பிடப்பட்ட சராசரி நுகர்வு நாட்டம்

$$APC = C/Y_d = 17400/18000 = 174/180 = 0.97$$

(01 புள்ளி)

- ரூபா. 9,000 - 18,000 வருமான வீச்சில் எல்லை நுகர்வு நாட்டம்

$$= (17400-10200)/(18000-9000) = 7200/9000$$

$$= 4/5 = 0.8$$

(02 புள்ளிகள்)

(ஆ) - வீட்டுத்துறையின் நுகர்வுச் சார்பு: $C = a + bY_d$
- சுயாதீன நுகர்வு (a) = 3000
- எல்லை நுகர்வு நாட்டம் (b) = 0.8
- நுகர்வுச் சார்பு = $C = 3000 + 0.8Y_d$ (02 புள்ளிகள்)
- வீட்டுத்துறையின் சேமிப்புச் சார்பு $S = -a + (1-b)Y_d$


$$S = -3000 + 0.2Y_d$$

(02 புள்ளிகள்)

(இ) நுகர்வுச் சார்பையும் சேமிப்புச் சார்பையும் வரைபடத்தில் காட்டுக.

மறு பக்கம் பார்க்கவும்


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/




(03 புள்ளிகள் நுகர்வுச் சார்பிற்கும் 02 புள்ளிகள் சேமிப்பு சார்பிற்குமாக மொத்தம் 05 புள்ளிகள்)


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

## உப பகுதி - 'ஆ'

(இப்பகுதியிலிருந்து ஆகக்குறைந்தது இரண்டு வினாக்களைத் தெரிவுசெய்க.)

5. (i) அண்மிய பணத்திற்கும், பணப் பதிலீடுகளுக்கும் இடையிலான வேறுபாட்டைத் தருக. (04 புள்ளிகள்)

(ii) தற்போது இலங்கையில் நிலவும் உயர் பணவீக்கத்திற்கான காரணங்கள் நான்கினைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) பணத்திற்கான கேள்விக்கும் வட்டி வீதத்திற்கும் இடையிலான தொடர்பை விளக்குக. (05 புள்ளிகள்)

(iv) பணநிரம்பலைக் கட்டுப்படுத்த மத்திய வங்கியிடம் உள்ள வேறுபட்ட நுட்ப முறைகளைக் குறிப்பிடுக. (07 புள்ளிகள்)

06.(i) - பணமாகக் கருதப்படாத ஆனால் மிக இலகுவில் பணமாக மாற்றிக்கொள்ளத்தக்க தம்மகத்தே திரவத்தன்மை வாய்ந்த சொத்துகள் அண்மியபணமாகக் கருதப்படும்.பெறுமானத்திரட்டாக பணத்தின் பணியைச் செய்யும் வரையும் அண்மிய பணமாகக் கருத முடியும் ஆயினும் அவற்றைப் பரிமாற்றூடகமாகப் பயன்படுத்த முடியாது (01 புள்ளி)

- நிலையான மற்றும் சேமிப்பு வைப்புகள் திறைசேரி உண்டியல்கள் முதிர்வடையும் நிலையில் உள்ள திறைசேரி முறிகள் ஐக்கிய அமெரிக்க டொலர் யூரோ பௌண் போன்ற அதிகளவில் கொடுக்கல் வாங்கல் செய்யப்படும் வெளிநாட்டு நாணயங்கள் போன்றவற்றை அண்மிய பணத்திற்கு உதாரணமாகக் கொள்ளலாம். (01 புள்ளி)

- மறுபுறம் பணப்பதிலீடுகளாகக் கருதப்படுபவை பெறுமானத் திரட்டாக பணத்தின் பணியை ஆற்றும் அதேவேளை பரிமாற்ற ஊடகமாகத் தற்காலிகமாகப்பயன்படுத்தக் கூடிய பொருள்களாகும். (01 புள்ளி)

- வங்கியில் நடைமுறைக்கணக்கின் மீது எழுதப்படும் காசோலைகள் கடன்அட்டைகள் செலவட்டைகள் நினைவு நாணயங்கள் (Token Coins) என்பவற்றுடன் தற்போது நாம் காணக்கூடிய பல்வேறுபட்ட இலத்திரனியல் கடன்கள பணப்பதிலீடுகளுக்கு உதாரணங்களாகக் கூறலாம். (01 புள்ளி)

(ii) - எரிபொருள் நெருக்கடி வாகன மாற்றங்கள் கோவிட் கொள்ளைநோய் பரம்பலும் ரஷ்யாவுக்கும் இடையிலான யுத்தம் போன்ற பல்வேறு காரணங்களால் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு மற்றும் உள்நாட்டு நிரம்பல் சங்கிலியில் ஏற்பட்ட முறிவுகள் காரணமாக உணவுப்பொருள்களின் விலைகளில் ஏற்பட்ட மிகத் துரித அதிகரிப்பு.

- அத்தியாவசியப் பொருள்களின் இறக்குமதியைத் தடைசெய்தமை விவசாய உள்ளீடுகளின் செலவுகள் அதிகரித்தமை இரசாயன பசளைகளின் பயன்பாட்டைத் தடை செய்தமை உடனடியாக இயற்கை உரங்களின் பயன்பாட்டுக்கு மாறியமையால் விவசாய விளைபொருள்களின் விளைச்சல் அதிகளவு வீழ்ச்சியடைந்தமை போன்ற உள்நாட்டுக் கொள்கைப் பிறழ்வுகள் காரணமாக நிரம்பல் சங்கிலியில் முறிவுகள் தீவிரமடைந்தமை.

- மிகப்பெரிய பாதீட்டுக் குறைநிலையை நிரப்பும் பொருட்டு அரசாங்கம் வட்டிவீதங்களைக் குறைத்து விரிவாக்கப் பணக்கொள்கையைக் கையாண்டமை. 2019 டிசம்பர் மாதத்திலிருந்து 2021 ஆகஸ்ட் மாதம் வரையிலான காலப்பகுதியில் இலங்கையின் பணநிரம்பல் 2.8 ட்ரில்லியன் ரூபாவினால் 42 சதவீதத்தினால் அதிகரித்தது.

- இரண்டுவருட காலப்பகுதிக்கு மேல் நிலவிய கோவிட் கொள்ளைநோயும் பிழையான பொருளாதார முகாமைத்துவமும் இணைந்து பாரிய அந்நியச் செலாவணி நெருக்கடி நிலைமையை எதிர்நோக்கச் செய்ததுடன் அதன் விளைவாக உணவுப்பொருள் எரிபொருள்


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

உரம் மருந்துப்பொருள்கள் போன்ற அத்தியாவசியமான இறக்குமதிகளை பெற்றுக் கொள்வதைக் கடினமாக்கியது.

- நாணய மாற்றுவீதம் தேய்வடைந்தமை : 2022 மார்ச் மாதத்திலிருந்து நாணய மாற்றுவிதத்தை மிதக்க விட அனுமதித்த பின்னர் இரண்டு மாத காலப்பகுதிக்குள் அமெரிக்க டொலரின் பெறுமதி 365 ரூபா வரை அதிகரித்தது. இரண்டுமாத காலப்பகுதியினுள் நாணயமாற்று வீதம் 80 சதவீதத்தினால் தேய்வடைந்தமையானது 100 சதவீதத்திற்கு மேல் உணவுப் பணவீக்கம் அதிகரிக்க முக்கிய பங்களிப்புச் செய்தது.

- முழுப்பொருளாதாரமும் சுருக்கமடைந்தமை : அண்மைய ஆண்டுகளில் இலங்கைப்பொருளாதாரம் தீவிரமாகச் சுருங்கியமையும் பணவீக்கப் போக்குகள் வலுவடையக் காரணமாகும்.

பொருளாதார வளர்ச்சி வீதம் :

- 2020 -3.6%
- 2021 3.3%
- 2022 -7.8%

(ஒரு விடயத்திற்கு 01 புள்ளி வீதம் ஏதேனும் நான்கு விடயங்களுக்கு 04 புள்ளிகள்)

(iii) - உத்தேசநோக்கப் பணக் கேள்வி விளக்கத்தின்படி வட்டிவீதத்திற்கும் பணத்திற்கு ஏற்படும் கேள்விக்கும் இடையில் எதிர்க்கணிய தொடர்பு காணப்படுகிறது.

(01 புள்ளி)

- வட்டிவீதம் குறைவடையும் போது ஒரு சொத்தாக பணநிலுவைகளுக்கான கேள்வி அதிகரிக்கும். முறிகளின் விலைகள் வட்டிவீதத்துடன் எதிர்க்கணியத் தொடர்பைக் கொண்டுள்ளன. வட்டிவீதங்கள் அதிகரிக்கும் போது முறிகளின் விலைகள் குறைவடைவதுடன் வட்டிவீதம் குறைவடையும் போது அவற்றின் விலைகள் அதிகரிக்கும்.
01 புள்ளி

- முறிகளின் விலையில் ஏற்படும் இத்தகைய தளம்பல்கள் காரணமாக முறிகளின் விலைகள் குறைவடையும் காலப்பகுதியில் (அதாவது வட்டிவீதம் உயர்வாக இருக்கும் சந்தர்ப்பங்களில்) அவற்றைக் கொள்வனவு செய்வதன் மூலமும் அவற்றின் விலைகள் உயர்வாக உள்ளபோது (அதாவது வட்டிவீதம் குறைவாக உள்ளபோது) அவற்றை விற்பனை செய்வதன் மூலமும் முறிகளை வைத்திருப்போர் மூலதன இலாபத்தை உழைக்கலாம்.
01 புள்ளி

- எவ்வாறாயினும் பணத்தைக் கைவசம் வைத்திருக்கும் போது காணப்படாத இடர்பாயம் முறிகளை கைவசம் வைத்திருக்கும் போது ஏற்படுவதைக் காணமுடியும். இதனால் எதிர்காலத்தில் வட்டிவீதம் குறையும் என எதிர்பார்க்கும் நபர்கள் முறிகளின் எதிர்கால விலைகள் அதிகரிக்கும் என எதிர்பார்ப்பதுடன் இதன் மூலம் மூலதன இலாபத்தை உழைக்கும் நோக்கில் நிகழ்காலத்தில் பணக்கையிருப்புகளை வைத்திருப்பதற்கான கேள்வியைக் குறைத்து முறிகளை அதிகளவில் கொள்வனவு செய்வர். மறுபுறம் எதிர்காலத்தில் வட்டிவீதம் அதிகரிக்கும் என எதிர்பார்ப்பார்களாயின் நிகழ்காலத்தில் முறிகளைக் கொள்வனவு செய்யாமல் கைவசமுள்ள பத்திரங்களைவிற்பனை செய்து பணநிலுவைகளுக்கான கேள்வியை அதிகரிப்பர்.

01 புள்ளி

- பண நிலுவைகளை கைவசம் வைத்திருப்பதற்கான அமையச் செலவாக வட்டிவீதம் கருதப்படும். இதனால் வட்டிவீதம் அதிகரிக்கும் போது பணநிலுவைகளை கைவசம் வைத்திருப்பதற்கான அமையச் செலவு அதிகரிக்கும். அதனால் வட்டிவீதம் உயரும் போது பணத்திற்கான கேள்வி குறைவடையும்.
01 புள்ளி

(மொத்தம் 04 01 புள்ளிகள்)



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

(iv) - பணநிரம்பலைக் கட்டுப்படுத்துவதற்காக மத்திய வங்கியிடம் பரந்த அடிப்படையிலான நுட்பமுறைகள் உள்ளன.

- கொள்கை வட்டி வீதங்கள்
- திறந்த சந்தை நடவடிக்கைகள்
- நியதி ஒதுக்கு வீதம்
- வங்கி வட்டிவீதம்
- மீள் நிதியிடல் வசதிகள்
- கடன்கள் மீதான தொகைக் கட்டுப்பாடுகள்
- வட்டிவீத உயர் எல்லைகளை நிர்ணயித்தல்
- கடன் கடிதங்களுக்கான எல்லைத் தேவைப்பாடுகளை நிர்ணயித்தல்
- அந்நியச் செலாவணி நடவடிக்கைகள்
- கடன்கள் மீது பெறுமதி வீதங்களைச் சுமத்துதல்
- நெறிமுறைக் கட்டுப்பாடுகள்

(ஒரு விடயத்திற்கு 01 புள்ளி வீதம் ஏதேனும் ஏழு விடயங்களுக்கு 07 புள்ளிகள்)

7. (i) பின்வரும் பொருள்களை பொதுப் பொருள், மேன்மைப் பொருள்கள், தீங்கு விளைவிக்கும் பொருள்கள் என வகைப்படுத்துக.
(அ) வானொலி ஒலிபரப்புகள்
(ஆ) தடுப்பூசியேற்றல்
(இ) சிகரட்டுகள்
(ஈ) அருங்காட்சியகங்கள் (04 புள்ளிகள்)

(ii) நேர் வரிகளினதும் நேரில் வரிகளினதும் அனுகூலங்களையும் பிரதிகூலங்களையும் ஒப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) (அ) வரி விளைவு என்பதால் கருதப்படுவதென்ன? (02 புள்ளிகள்)
(ஆ) வரியின் சட்ட ரீதியான விளைவு, பொருளியல் விளைவு என்பவற்றை வேறுபடுத்துக. (04 புள்ளிகள்)

(iv) நுகர்வின் ஒரு எதிர்க்கணிய வெளிவாரியானது ஒதுக்கீட்டு வினைத்திறனை எவ்வாறு பாதிக்கும்? ஒரு வரைபடத்தைப் பயன்படுத்தி உமது விடையை விளக்குக. (06 புள்ளிகள்)


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

07. (i) - (அ) வானொலி ஒலிபரப்பு - பொதுப்பொருள்
(ஆ) தடுப்பூசி ஏற்றல் - சமூகநலப்பொருள்
(இ) சிகரட் - தீங்குவிளைவிக்கும்
(ஈ) அருங்காட்சியகம் - சமூகநலப்பொருள் (04 புள்ளிகள்)

(ii) :

| நேர் வரி | |
|---|---|
| **அனுகூலங்கள்** | **பிரதிகூலங்கள்** |
| 1. மிகவும் நியாயத்தன்மை கொண்டது வரிசெலுத்தும் ஆற்றலுடையோர் மீது மட்டும் விதிக்கப்படும் விருத்திமுறைத் தன்மை கொண்டதாகும். | 1. வேலை செய்யும் விருப்பத்தையும் வியாபாரங்களை நடத்திச் செல்லும் ஆற்றலையும் குறைக்கும். மூளைசாலிகள் வெளியேற்றத்தை ஊக்குவிக்கும். |
| 2. வரிச்சுமையை நிர்ணயிப்பது இலகுவானது. சுமையை இடம்பெயரச் செய்வது கடினம். | 2. ஆட்களினதும் கம்பனிகளினதும் சேமிப்புகளை குறைக்கும். |
| 3. வரி அறவீடு இலகுவானது. உ-ம் PAYE வரியானது உயர் சம்பளம் பெறுவோரிடமிருந்து அறவிடப்படும் நேரடியான வரியாகும். | 3. வரி ஏய்ப்பு வரி தவிர்ப்பு என்பனவற்றை ஊக்குவிக்கும் |
| 4. அரசாங்கத்தின் கேள்விப்பக்க பேரினப்பொருளாதாரக் கொள்கைகளுக்கு மிகவும் பிரயோசனமானது. | 4. வரி செலுத்தலில் தெரிவு செய்ய (செலுத்துவதா இல்லையா என்று) வாய்ப்பில்லை. வரி செலுத்துவதைத் தவிர்க்க முடியாது. |

(ஒரு அனுகூலத்திற்கு 01 புள்ளி ஒரு பிரதிகூலத்திற்கு 01 புள்ளி மொத்தம் 02 புள்ளிகள்)



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

| நேரில் வரி | |
|---|---|
| **அனுகூலங்கள்** | **பிரதிகூலங்கள்** |
| 1. நேரில் வரியின் வரிவிளைவை/தாக்கத்தை தீர்மானிப்பது இலகுவாகும். | 1. நேரில் வரிகள் குறைந்து செல்லும் போக்குடையவையாகும். வருமானத்தின் சதவீதமாக நோக்குமிடத்து வறியவர்கள் மீது அதிக சுமை ஏற்படும். |
| 2. சிலவகை நுகர்வு நடவடிக்கைகளைக் குறைக்கப் பயன்படுத்தலாம். உ-ம் மதுபானம் புகையிலை | 2. வரிசேகரிப்பானது கடினமானதும் செலவு கூடியதுமாகும். |
| 3. நெகிழ்வற்ற கேள்வியுடைய பொருள்கள் மீது நேரில்வரி விதிப்பதன் மூலம் வரி வருவாயை அதிகரிக்கலாம். | 3. வரியின் மூலம் திரட்டக்கூடிய வரிவருவாயை முன்கூட்டியே எதிர்வு கூறுவது கடினமானது. |
| 4. வேலை செய்வதற்கான விருப்பத்தில் பாதிப்பை ஏற்படுத்தாது. | 4. பணவீக்கத்திற்கு நேரடியாகப் பங்களிக்கும் |

(ஒரு அனுகூலத்திற்கு 01 புள்ளி ஒரு பிரதிகூலத்திற்கு 01 புள்ளி மொத்தம் 02 புள்ளிகள்)

(iii) (அ) - வரி விளைவு/வரித்தாக்கம் என்பதனால் கருதப்படுவது யாதெனில் வரி ஒன்றின் நேரடி பணரீதியிலான வரிச்சுமை இறுதியாக சென்றடையும் இடமாகும். இது வரிப் பெயர்ச்சிச் செயன்முறையின் இறுதி விளைவாகவும் இருக்கும். இந்நிலையில் குறித்த நபர் இது வரிச்சுமை விழுந்தபின்னர் அதற்கு மேலும் வரிச்சுமையை இடம் பெயர்ச்செய்ய முடியாது. இறுதி வரிச்சுமையானது பொருளாதாரத்தின் பல்வேறு குழுக்கள் இடையே பிரிந்து செல்லவும் கூடும். (02 புள்ளிகள்)

(ஆ) - சட்டரீதியிலான வரிவிளைவு/வரித்தாக்கம் பொருளாதார வரிவிளைவு என இருவகையான விளைவுகள் உள்ளன. பொதுவாக சட்டரீதியில் அரசாங்கத்திற்கு வரிசெலுத்த சட்டரீதியில் கட்டுப்பட்டுள்ள நபர்களும் கம்பனிகளும் செலுத்தும் வரியின் அளவு சட்டரீதியிலான வரிவிளைவாகும். பொருளாதார வரிவிளைவு என்பதனால் கருதப்படுவது யாதெனில் ஒரு வரியின் காரணமாக இறுதியில் சமூகத்தின் பொருளாதார நலனில் மீது அது ஏற்படுத்தும் விளைவாகும். (02 புள்ளிகள்)

- சட்டரீதியிலான வரிவிளைவு பொருளாதார வரிவிளைவு என்பவற்றிற்கிடையிலான வேறுபாடானது வரியினை இடம் பெயரச் செய்யும் ஆற்றலில் தங்கியுள்ளது. வரியினை இடம்பெயரச்செய்ய முடியாதாயின் சட்டரீதியிலான வரிவிளைவும் பொருளாதார ரீதியிலான வரிவிளைவும் ஒன்றுக்கொன்று சமமாகும். (02 புள்ளிகள்)

(iv) - ஒரு பொருளின் நுகர்வானது மூன்றாவது தரப்பினர் மீது எதிர்க்கணிய ரீதியில் பாதிப்பை உருவாக்கும் போது நுகர்வில் எதிர்க்கணிய வெளிவாரிகள் உருவாகும். உதாரணமாக ஒரு நபர் நள்ளிரவில் அதிகூடிய சத்தத்துடன் சங்கீதத்தை ரசிப்பதை அல்லது தனக்கருகில் உள்ள நபர்களுக்குப் பாதிப்பை



Download all Past Papers>> https://bookbeekid.com/resource/past-papers/

ஏற்படுத்தும் வண்ணம் புகைபிடிப்பதைக் கூறலாம். இச்சந்தர்ப்பங்களில் நுகர்வின் சமூக நன்மைகள் தனிப்பட்ட நன்மைகளைவிடக் குறைவாகும்

(02 புள்ளிகள்)

- குறித்த ஒரு பொருளை அல்லது சேவையை நுகரும்போது எதிர்க்கணிய வெளிவாரிகள் உருவாகுமாயின் அது ஒரு சந்தைத் தோல்வியைக் காட்டும். ஏனெனில் குறித்த நுகர்வோன் தனது நுகர்வு நடத்தை காரணமாக ஏனையவர்கள் மீது ஏற்படும் செலவுகளைக் கருத்திற் கொள்ளவில்லை. வெளிவாரிச் செலவுகளைக் கருத்திற்கொள்ளாமல் தனிப்பட்ட நன்மையை மட்டும் கருத்திற்கொண்டு தீர்மானம் மேற்கொள்ளும் போது சந்தையின் நுகர்வு மட்டமானது (உற்பத்தியின் பாய்ச்சல்) சமூகரீதியில் விரும்பத்தக்க உத்தம நுகர்வுமட்டத்தை விட மிகவும் கூடுதலாகக் காணப்படும். இந்த மிகக் கூடுதலான நுகர்வு நிலைமையானது (உற்பத்தியின் பாய்ச்சல்) வளப்பயன்பாட்டின் வினைத்திறன் இன்மையைக் (இழக்கப்படும் நலனை) காட்டுகிறது (02 புள்ளிகள்)

- இதனைப் பின்வரும் வரைபடம் காட்டுகிறது.




எதிர்க்கணிய வெளிவாரியுள்ள பொருளின் தாராளசந்தை நுகர்வுமட்டம் (உற்பத்தியின் பாய்ச்சல்) $Q_1$ ஆகும். அந்நுகர்வு மட்டத்தில் எல்லை சமூக நன்மை $P_3$ ஆகும். ஆனால் அதன் சமூக செலவு $P_1$ ஆகும். சமூகரீதியில் வினைத்திறனுள்ள விரும்பத்தக்க உத்தம உற்பத்தி மட்டமானது எல்லைச் சமூக நன்மைகள் எல்லைச் சமூக செலவுக்கு சமப்படும் $Q_2$ உற்பத்தி மட்டமாகும். முக்கோணம் ABC யானது இழக்கப்படும் நலனின் அளவைக் காட்டுகிறது.

(சரியான வரைபடத்திற்கு 01 புள்ளி. இழக்கப்படும் நலனைக்காட்டும் முக்கோணத்தைப் பெயரிட 01 புள்ளி)

(மொத்தம் 06 புள்ளிகள்)



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

8. (i) ஒரு நாட்டின் ஒப்பீட்டு நன்மையைத் தீர்மானிக்கும் மூன்று காரணிகளைக் கூறுக. (03 புள்ளிகள்)

(ii) சென்மதி நிலுவைக் கூற்றில் உள்ள பிரதான கணக்குகளும் உள்ளடக்கங்களும் யாவை? (04 புள்ளிகள்)

(iii) இலங்கை தொடர்பில் உதாரணங் காட்டி பிராந்திய வர்த்தக உடன்படிக்கைக்கும் இருபக்க வர்த்தக உடன்படிக்கைக்கும் இடையிலான வேறுபாட்டை விளக்குக. (06 புள்ளிகள்)

(iv) "2000 ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 30% ஆக இருந்த ஏற்றுமதிச் சதவீதம் 2020 இல் ஏறத்தாழ அரைப்பங்காக 14.8% ஆகக் குறைவடைந்தது". அண்மைய தசாப்தங்களில் இலங்கையின் ஏற்றுமதித் துறையின் நலிந்த செயலாற்றுகைக்கான காரணிகளை விளக்குக. (07 புள்ளிகள்)

08. (i)
- இயற்கை வளங்களின் அளவும் அவற்றின் தரமும்
- குடித்தொகைக் காரணிகள் (குடிப்பெயர்வு கல்வித்தரஉயர்வு தொழிற்படையில் பெண்களின் பங்குபற்றல் நிலை)
- உட்கட்டமைப்பு வசதிகள் உள்ளிட்ட மூலதனவாக்கத்திற்கான முதலீடுகள்
- கூடிச்செல்லும் அளவுத்திட்ட விளைவும் தொழிற்பிரிப்பும்.
- ஆய்வு மற்றும் அபிவிருத்தித் துறையில் மேற்கொள்ளப்படும் முதலீடுகள்
- அரசாங்கக் கொள்கைகள் (வரி மானியம் நாணயமாற்றுவீதம்)
- நிறுவனங்கள் (வங்கிக் கட்டமைப்பு நீதித்துறைக்கட்டமைப்பு அரசியல் நிறுவனங்கள் ஜனநாயகத்தின் உறுதித்தன்மை)
- புவியியல் இடஅமைவு (காலநிலை மற்றும் புவியியல் பண்புகள்)

(ஒரு விடயத்திற்கு 01 புள்ளி வீதம் ஏதேனும் மூன்று விடயங்களுக்கு 03 புள்ளிகள்)

(ii)
- நடைமுறைக்கணக்கு (01 புள்ளி)
  - பொருட்கள்
  - சேவைகள்
  - முதனிலை வருமானம்
  - இரண்டாம் நிலை வருமானம்
- மூலதனக்கணக்கு (01 புள்ளி)
- நிதிக்கணக்கு (01 புள்ளி)
  - நேரடி முதலீடுகள்
  - பல்வகை முதலீடுகள் (பட்டியல் முதலீடுகள்)
  - வேறு முதலீடுகள்
  - சொத்து ஒதுக்குகள்

(நடைமுறைக்கணக்கிலோ மூலதனக்கணக்கிலோ உள்ளடக்கத்தைத் தந்திருப்பின் 01 புள்ளி)

(மொத்தம் 04 புள்ளிகள்)

(iii) - இரு நாடுகளுக்கிடையில் சாதகமான வர்த்தக போக்கினை ஏற்படுத்தும் பொருட்டு உருவாக்கப்படும் ஒப்பந்தமாகும். இதன் மூலம் ஒவ்வொருநாடு சந்தையிலும் பிரவேசிப்பதற்கான வாய்ப்பேற்படுவதனால் அது இருநாடுகளினதும் வர்த்தக விரிவாக்கத்திற்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் சாதகமாகும்.



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

ஒப்பந்தத்தின் நிபந்தனைகள் ஊடாக வர்த்தகத்தின் பொருட்டு தொடர்புடைய துறைகளை இலங்கையுடன் போட்டியிடுவதற்கு உகந்த சமதளம் level paying filed) நிர்மாணிக்கப்படும். (02 புள்ளிகள்)

- உதாரணம்
  - இந்திய இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தம்
  - இலங்கை பாக்கிஸ்தான் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம்
  - இலங்கை சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம்

(ஒரு உதாரணத்திற்கு 01 புள்ளி)

- அங்கத்துவ நாடுகளிடையே பொருள்களும் சேவைகளும் சுதந்திரமாக செல்வதை ஊக்குவிக்கும் நோக்கில் குறிப்பிட்ட புவியியல் பிரதேசத்திலுள்ள நாடுகள் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கையில் ஒன்றிணைந்து கைச்சாத்திடும் ஒப்பந்தம் பிராந்திய வர்த்தக ஒப்பந்தம் எனக்கருதப்படும். அங்கத்துவ நாடுகள் மத்தியில் வர்த்தகத் தடைகளை நீக்குவதற்கான நிபந்தனைகள் ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்படும். அதேபோல் அங்கத்துவமல்லாத நாடுகள் தொடர்பில் கடைப்பிடிக்க வேண்டிய செயற்பாடுகளும் அதில் குறிப்பிடப்பட்டிருக்கும். (02 புள்ளிகள்)

உதாரணம்

- தெற்காசிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (SAFTA)
- கிழக்காசிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (APTA)
- ஆசிய நாடுகளின் முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கை (APTA)

(ஒரு உதாரணத்திற்கு 01 புள்ளி)


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

- (iv) - ஏற்றுமதி பன்முகப்படுத்தல் மிக வரையறுக்கப்பட்டதாக இருந்தமை. 1990களின் நடுப்பகுதியிலிருந்து நாட்டின் ஏற்றுமதி உள்ளடக்கம் பொதுவாக நிலையானதாக இருந்துள்ளது. ஆடைகள் தேயிலை றப்பர் போன்ற மரபுரீதியான சில உற்பத்திகளுக்கு அப்பால் பன்முகப்படுத்தல் நடைபெறவில்லை.

- ஏற்றுமதிச் சந்தைகளிலும் பன்முகத்தன்மையைக் காணமுடியாமை. மொத்த ஏற்றுமதிகளில் மூன்றில் இரண்டு பங்கு அமெரிக்காவையும் ஐரோப்பாவையும் நோக்கிச் செல்கிறது. மேலும் தேயிலை ஏற்றுமதிகளில் 70 சதவீதமளவில் மத்திய கிழக்கிற்கும் பொதுநலவாய நாடுகளுக்கும் செல்கிறது.

- ஏற்றுமதியை நோக்கிய கைத்தொழில்களில் முதலீடுகள் வரையறுக்கப்பட்டமை. கிழக்காசியாவின் புதிதாகக் கைத்தொழில்மயமாகிய நாடுகளின் ஏற்றுமதித்துறையின் துரித வளர்ச்சிக்கு ஏற்றுமதி நோக்கிலான நேரடி வெளிநாட்டு முதலீடுகளாகும். ஆனால் இலங்கை வெளிநாட்டு நேரடி முதலீடுகளை சந்தையினை நோக்கி நகர்த்துவதில் தோல்வி கண்டுள்ளது.

- எளிமையான தொழினுட்பத்தின் அடிப்படையிலமைந்த ஏற்றுமதிக் கைத்தொழில். இலங்கையில் குறைந்த மட்டத்திலான தொழில் நுட்பத்தையும் அறிவையும் அடிப்படையாகக் கொண்ட ஏற்றுமதிக் கைத்தொழில்களே காணப்படுகின்றன. மேற்குக நாடுகள் அவ்வாறான தொழில் நுட்பங்களைக் கைவிட்டு உயர்தொழில் நுட்பங்களை நோக்கிச் செல்லும் போது இலங்கை இன்னமும் அத்தகைய தொழில் நுட்பங்களிலேயே தொங்கிக் கொண்டிருக்கிறது

- நிகழ்காலத்தில் பிரதான ஏற்றுமதிக் கைத்தொழில்களில் விளைதிறன் அதிகரிக்கும் வேகத்தை விடக் கூடிய வேகத்தில் சம்பளங்கள் அதிகரிக்கும் பிரச்சினையையும் எதிர்நோக்கியுள்ளது.
- தேயிலை ஏற்றுமதித்துறையில் விளைதிறன் குறைதலும் செலவுகள் அதிகரித்தலும். ஊழியச் செறிவுடைய தொழில் நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திச் செயன்முறையின் செலவுகள் அதிகமாகும். பழைய தேயிலைச் செடிகள் குறைந்த விளைச்சலையே தருகின்றன. இலங்கையின் போட்டி நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கை தேயிலை உற்பத்திச் செலவுகள் அதிகரிக்கின்றமை முக்கிய பிரச்சினையாகும்.
- தொழிற்படை குறைவடைதலும் ஊழியச் செலவுகள் அதிகரித்தலும். தேயிலைத் தோட்டங்களுக்குத் தேவையான தொழிலாளர்களைத் தோட்டங்களில் இருக்கச் செய்வது சவாலாக உள்ளது. தேயிலைத் தொழிலாளர்களின் குறைந்தசமூக மட்டம் இளைய தலைமுறை கல்விகற்று தோட்டத் துறையில் ஈடுபடவிரும்பாமை தேயிலைத் தோட்டங்களுக்கு வெளியில் கவர்ச்சிகரமான தொழில் வாய்ப்புகள் கிடைக்கின்றமை போன்றன இதில் தாக்கம் செலுத்தியுள்ளன.

- இலங்கை இதுவரைக் கைச்சாத்திட்டுள்ள சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களின் கீழ் திறக்கப்பட்டுள்ள சந்தைவாய்ப்புகளை வினைத்திறனாகப் பயன்படுத்தத் தவறியுள்ளமை.

(ஒரு விடயத்திற்கு 02 புள்ளிகள் வீதம் ஏதேனும் நான்கு விடயங்களுக்கு உயர்ந்தபட்சம் 07 புள்ளிகள்)


Download all Past Papers>> https://bookbeekid.com/resource/past-papers/

9. (i) பொருளாதார அபிவிருத்தியையும் மனித அபிவிருத்தியையும் வேறுபடுத்துக. (04 புள்ளிகள்)

(ii) வறுமைக் கோட்டிற்கும், தலைக்குரிய வறுமைக் குறிகாட்டிக்கும் இடையிலான வேறுபாடு யாது? (04 புள்ளிகள்)

(iii) தொழில்புரியும் வயதுச் சனத்தொகையில் கணிசமான பகுதியினர் பொருளாதார ரீதியில் செயற்படாத நிலையில் உள்ளமைக்கான காரணங்களை விளக்குக. (04 புள்ளிகள்)

(iv) (அ) சமூக பாதுகாப்பு வலையமைப்பு என்பதால் கருதப்படுவதேன்ன? (02 புள்ளிகள்)

(ஆ) இலங்கையில் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் சமூக பாதுகாப்பு வலையமைப்பு நிகழ்ச்சித் திட்டங்களில் காணப்படும் குறைபாடுகள் எவை என்பதைப் பரிசீலிக்குக. (06 புள்ளிகள்)

09. (i) - பொருளாதார அபிவிருத்தி மற்றும் மனித அபிவிருத்தி ஆகியன ஒன்றுடன் ஒன்று இணைந்த எண்ணக்கருக்களாகும். இவை இரண்டுமே பொருளாதாரச் செல்வம் மற்றும் மனிதனின் நலன் ஆகிய இரு பரிமாணங்கள் ஊடாக ஒரு நாட்டின் மொத்த அபிவிருத்தியை அளவீடு செய்கின்றன. மனித அபிவிருத்தியானது பெரும்பாலும் மனிதர்களின் நல்வாழ்வு குறித்த கவனஞ்செலுத்துவதுடன் பொருளாதார அபிவிருத்தியானது விரிவாகப் பரந்து விரிந்துள்ள சமூக பொருளாதார நியாயத்துவம் குறித்துக் கவனஞ்செலுத்துகிறது.

- மனித அபிவிருத்தி என்னும்போது நபரொருவரின் சுதந்திரம் அவரின் முன்னே உள்ள வாய்ப்புகள் (opportunities) மற்றும் நல்வாழ்வு ஆகியன தொடர்ச்சியாக முன்னேறிச் செல்லும் செயன்முறையாகும். 1970களில் இவ்வெண்ணக்கரு முன்வைக்கப்பட்டமைக்கான காரணம் மொத்த உள்நாட்டு உற்பத்தி அல்லது பொருளாதார வளர்ச்சியானது மனித அபிவிருத்தியை அளவீடு செய்யப் போதுமானதாக இல்லை என்று கண்டறியப்பட்டதனாலாகும்.

- மனிதர்களுக்கு சிறப்பான சுகாதார நிலைமைகள் கல்விக்கான சாதகமான ஒரு பிரவேசம் சிறந்த வாழ்க்கைத் தரம் ஆகியன இருக்க வேண்டும் என மனித அபிவிருத்தி எண்ணக்கரு நம்புகிறது. மனித அபிவிருத்திச் சுட்டெண்ணின் மூலம் மனித அபிவிருத்தி அளவிடப்படுகிறது. மனித அபிவிருத்தியுடன் தொடர்புடைய ஏனைய அளவு கோல்களாக மனித வறுமைக் குறிகாட்டி ஆண் பெண் சமூக நிலைமையினை வலுவூட்டல் குறிகாட்டி என்பவற்றைக் கருதலாம்.

- பொருளாதார அபிவிருத்தியானது பரந்த ஒரு எண்ணக்கருவாக உள்ளதுடன் அதிலும் பன்முகப் பரிமாணங்கள் பல காணப்படுகின்றன. பொருளாதார வளர்ச்சிக்கு மேலதிகமாக சிறந்த வாழ்க்கைத் தரத்தை அடைவதற்குத் தேவையான முக்கியமான மாற்றங்கள் பலவற்றின் நோக்கங்களும் மாற்றங்களும் அதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. மனித மூலதனத்தை அபிவிருத்தி செய்தல் வாழ்க்கைத்தரத்தை அதிகரித்தல் உட்கட்டமைப்பு அபிவிருத்தி பொருளாதார வளர்ச்சி பொருளாதாரத்தின் கட்டமைப்பு மாற்றங்கள் சர்வதேச வர்த்தகத்தின் வளர்ச்சி சுற்றுச் சூழல் பாதுகாப்பு சுகாதாரம் மற்றும் ஆயுள் எதிர்பார்க்கை அதிகரிப்பு போன்ற பல்வேறு விடயங்கள் பொருளாதார அபிவிருத்தியில் உள்ளடக்கப்படும்.

(ஒரு விடயத்திற்கு 02 புள்ளிகள் வீதம் ஏதேனும் இரண்டு விடயங்களுக்கு 04 புள்ளிகள்)


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

(ii) - வறுமைக்கோட்டினால் காட்டப்படுவது உணவு உறையுள் போன்ற அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய ஒருவருக்கு மாதமொன்றில் தேவையான பணத்தின் அளவாகும்.

- இலங்கையின் உத்தியோகபூர்வ வறுமைக்கோடானது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான செலவீட்டு முறையினை அடிப்படையாகக்கொண்டு கணிப்பிடப்படுகிறது. அதன் போது ஆளொருவருக்குத்

தேவையான கலோரிகளைப் பெறுவதற்கு அவசியமான பணத்தின் அளவு உணவு வறுமைக் கோட்டின் கீழ் கணிப்பிடப்படுகிறது. அதன் பின்னர் உறையுள் உடை போக்குவரத்து போன்ற உணவல்லாத அத்தியாவசியத் தேவைகள் மீதான செலவீடுகள் கணிப்பிடப்பட்டு உணவு வறுமைக்கோட்டின் பெறுமதியுடன் கூட்டப்பட்டு தேசிய வறுமைக்கோட்டின் பெறுமதி கணிப்பிடப்படுகிறது.

(02 புள்ளிகள்)

- வறுமைக் கோட்டிற்குக் கீழ் வருமானம் உழைக்கும் நபர்களுக்கு அடிப்படைத்தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாதாகையால் அவர்கள் வறியவர்களாகக் கருதப்படுவர். இவ்வாறு வறுமைக் கோட்டின் கீழ் உள்ள மக்கள் தொகை மொத்த சனத் தொகையின் சதவீதமாக கூறப்படும் போது அது சனத்தொகை வறுமைக்குறிகாட்டி என அழைக்கப்படும்

(02 புள்ளிகள்)
(மொத்தம் 04 புள்ளிகள்)

(iii) பொருளாதார ரீதியில் இயங்காமைக்கான காரணங்கள்:
- முழுநேரமும் குடும்பத்தின் பணிகளில் ஈடுபடல்.
- முழுநேர மாணவர்களாக இருத்தல்.
- ஓய்வு பெற்றவர்களாக அல்லது முதியோராக இருத்தல்.
- நாட்பட்ட நோயாளர்களாக அல்லது அங்கவீனர்களாக இருத்தல்
- ஏதேனும் காரணத்தால் வேலை செய்ய விருப்பாமை.

(ஒரு விடயத்திற்கு 01 புள்ளி வீதம் நான்கு காரணங்களுக்கு 04 புள்ளிகள்)

(iv)(அ) - சமூக பாதுகாப்பு வலைப்பின்னல் என்பதனால் கருதப்படுவது பாதேனில் வறியவர்கள் முதியவர்கள் வலதுகுறைந்தோர் சிறுவர்கள் பெண்கள் இடம்பெயர்ந்தவர்கள் போன்ற பாதுகாப்பற்ற மற்றும் பாதிப்புறும் நிலையில் உள்ள மக்கள் பிரிவினருக்கு நன்மை பயக்கும் பொருட்டு பங்களிப்புக் கட்டணங்களின்றி செயற்படுத்தப்படும் நிகழ்ச்சித் திட்டங்களாகும்.

(01 புள்ளி)

- வறுமை பாதிப்புறும் நிலை சமூக புறக்கணிப்பு போன்ற பிரச்சினைகளை கையாள மிகப்பொருத்தமான கருவிகளாக வலைப்பின்னல்களுக்கு உயர்ந்த வரவேற்பு காணப்படுகிறது. பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள பணம் மற்றும் பொருள்களை வழங்குவது தொடக்கம் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் காப்புறுதிச் சேவைகள் வாழ்வாதார அபிவிருத்தி போன்ற பல்வேறு துறைகளை உள்ளடக்கி சமூக பாதுகாப்பு வேலைத்திட்டங்கள் செயற்படுகின்றன.

(01 புள்ளி)


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

(ஆ) - இலங்கையில் தற்போது சமூக பாதுகாப்பு வலைப்பின்னல் வேலைத்திட்டங்கள் பல செயற்பட்டு வரும் போதிலும் அவற்றில் பல்வேறு வரையறைகளும் குறைபாடுகளும் காணப்படுகின்றன.

- இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படும் சமூக பாதுகாப்பு வேலைத்திட்டங்களில் காணப்படும் மிகப்பொதுவான பிரச்சினை அத்திட்டங்களில் உள்ளடக்கப்படும் நபர்களின் எண்ணிக்கை சிறியதாக உள்ளமையும் இலக்குப்படுத்தப் படாமையுமாகும். வறியவர்கள் முதியவர்கள் மற்றும் வலது குறைந்தோர் ஆகியோரை இலக்குப்படுத்தி செயற்படுத்தப்படும் வேலைத்திட்டங்களில் அப்பிரிவுகளில் உள்ளோரில் மிகச்சிறிய சதவீதத்தினரே உள்வாங்கப்பட்டுள்ளனர்.

- மிகப்பெரிய சமூக பாதுகாப்புத் திட்டமான சமுர்த்தித் திட்டம் இலக்குப்படுத்தலில் மிகப்பெரிய பின்னடைவைக் காட்டுகிறது. இந்தத்திட்டத்தில் பிரதேச அரசியல் தலைமைத்துவம் மிகப்பெரிய செல்வாக்கு செலுத்துகிறது. கீழ் மட்டங்களில் தொழிற்படும் துறைசார் அதிகாரிகளில் பெரும்பாலானோர் அரசியல் செல்வாக்கினால் பதவிகளைப் பெற்றவர்களாகையால் சமுர்த்திப் பயனாளர்களைத் தெரிவு செய்கையில் அரசியல் அழுத்தங்களுக்கு அடிபணிகின்றனர். தேர்தல்களில் அரசியல் ஆதரவு வழங்கியோருக்கு பிரதியுபகாரமாக சமுர்த்தித் திட்டத்தில் அவர்கள் உள்வாங்கப் படுகின்றனர்.

- வரவு செலவுத்திட்ட வரையறைகளுக்கு மத்தியில் ஒதுக்கீட்டில் பாரிய சமமின்மைகள் உருவாகியுள்ளன. பெரும்பாலான செயற்திட்டங்களுக்கு ஒதுக்கப்படும் நிதிசார் மாற்றல்கள் மிகக்குறைவாக உள்ளமையினால் மக்களின் வாழ்க்கைத்தரத்தில் குறிப்பிட்டளவு மாற்றங்களை ஏற்படுத்துமளவுக்கு அவை போதுமானதல்ல. வரவுசெலவுத்திட்டத்தின் நிதியியல் வரையறைகள் காரணமாக பயனாளிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கோ அவற்றினால் வழங்கப்படும் நன்மைகளை அதிகரிப்பதற்கோ வாய்ப்பில்லை.

- சமூக பாதுகாப்பு வேலைத்திட்டங்களுக்கிடையில் தொடர்புகள் பலவீனமான நிலையில் உள்ளமை அவற்றின் வினைத்திறனைப் பாதித்துள்ளது. அமைச்சுகள் துறைகள் மாகாண சபைகள் போன்ற பல்வேறு அரசாங்க நிறுவனங்கள் ஊடாக பல்வேறு வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்படுவதனால் ஒருபுறம் செலவுகள் அதிகரிப்பதுடன் அவற்றின் நன்மைகள் துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றன.

- பெரும்பாலான திட்டங்களில் அவற்றில் உள்வாங்கப்படுவதற்கோ அல்லது வெளியேற்றப்படுவதற்கோ உரிய தகுதிவிதிகள் சரியாக இனங்காணப் படாமையால் வளப்பயன்பாடு வினைத்திறனற்றதாக மாறியுள்ளது.



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

- சமுர்த்தித் திட்டத்தின் சமூகநலப் பிரவேசம் FAO போன்ற சர்வதேச நிறுவனங்களின் கடுமையான விமர்சனங்களுக்கு உள்ளாகியுள்ளது. சமுர்த்தித் திட்டமானது இலங்கையர்களின் சமூகபொருளாதார அபிவிருத்திக்கு கைகொடுப்பதற்குப் பதிலாக அத்திட்டத்தில் சமூகநலப் பிரவேசத்தின் ஊடாக தங்கிவாழும் மனோபாவத்தை அதிகரித்துள்ளதாக அந்நிறுவனம் கருதுகிறது. எனவே இதுபோன்ற நிகழ்ச்சித் திட்டங்களை நீண்டகாலத்திற்கு செயற்படுத்துவது சவால் மிகுந்ததாகும்.

(ஒரு குறைபாட்டிற்கு 02 புள்ளி வீதம் ஏதேனும் மூன்று குறைபாடுகளுக்கு 06 புள்ளிகள்)

**10.** (i) அரச கடன் மறுசீரமைப்பு என்பதனால் கருதப்படுவதென்ன? (04 புள்ளிகள்)

(ii) இலங்கை தற்போதைய பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு அத்தியாவசியமாகத் தேவைப்படும் கொள்கை மாற்றங்களைக் கூறுக. (05 புள்ளிகள்)

(iii) இலங்கையின் ஏற்றுமதி சம்பாத்தியங்களை மேம்படுத்துவதற்கான ஒரு உபாயமாக உலக உற்பத்தி பகிர்வு வலையமைப்புகளின் (Global Production Sharing Networks) முக்கியத்துவத்தினை விளக்குக. (05 புள்ளிகள்)

(iv) சுதந்திரம் பெற்ற காலப்பகுதியில் இருந்து இலங்கை துரித பொருளாதார வளர்ச்சியை அடைவதற்குத் தடையாக இருந்த காரணிகளை ஆராய்க. (06 புள்ளிகள்)

10. (i) • அரசாங்கத்தின் கடன்களை மீள்கட்டமைப்புச் செய்வதென்பது அரச கடன்களின் நிலைபேறுடைய தன்மையை (debt sustainability) மீண்டும் ஏற்படுத்துவதற்காக கடைபிடிக்கப்படும் நடைமுறையாகும். ஒரு நாட்டின் கடனின் நிலைபேறுடைய தன்மையை மீண்டும் ஏற்படுத்துவதற்காக அரசியல் ரீதியிலும் சமூக ரீதியிலும் ஏற்றுக்கொள்ளத்தக்க பதிலீடுகள் இல்லாதபோது அரச கடன்களை மீள் கட்டமைப்புச் செய்ய அந்நாடு தீர்மானிக்கும்.

(01 புள்ளிகள்)

• கடன் மீள்கட்டமைப்பு மூலம் எதிர்பார்க்கப்படுவது யாதெனில் குறுகிய காலத்திலும் நீண்ட காலத்திலும் மொத்த நிதித் தேவைப்பாடு (Gross Financial Needs - GFN), உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நாணயங்களில் பெறப்பட்ட கடன்களை கடன்சேவை செய்தல் மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக அரசகடன்களின் அளவை முகாமை செய்யக் கூடிய மட்டத்தில் பேணுவதாகும்.

(01 புள்ளி)



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

- கடன் மீள்கட்டமைப்பு செய்யும் தீர்மானத்தை எடுத்த பின்னர் எந்தக் கடன்களை மீள்கட்டமைப்புச் செயன்முறையில் உள்ளடக்குவது எவற்றை அதிலிருந்து நீக்குவது என்பதை கடன் பெற்ற நாடு தீர்மானிக்க வேண்டும். அவ்வாறு எக்கடன்களை மீள்கட்டமைப்பு செய்வது என்பதைத் தீர்மானித்த பின்னர் பின்வரும் முறைகளில் கடன் மீள் கட்டமைப்பு செயற்பாடு நடைமுறைப்படுத்தப்படும்.
  - கடனின் முகப்பெறுமதியைக் குறைத்தல்: அதாவது கடனின் ஒரு பகுதியை வெட்டிவிடல் (hair cut).
  - கடன் முதிர்வடையும் காலப்பகுதியை நீடித்தல் : கடனை மீளச் செலுத்துவதற்கு அதிக காலத்தை வழங்குதல்.
  - கடன் வட்டி வீதங்களில் சீராக்கங்களை மேற்கொள்ளல்: கடன்மீது செலுத்தப்படும் வட்டிவீதத்தை குறைத்தல்.

- பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இம்மூன்று முறைகளையும் கலந்தே செயற்படுத்தப்படுகிறது. எவ்வாறாயினும் கடன்மீள்கட்டமைப்பு முறைமைகளுக்கு கடன் வழங்கியவர்களின் அனுமதி கட்டாயமானதாகும்.

(02 புள்ளி)

(மொத்தப் புள்ளிகள் 04)

(ii) பொருளாதார நெருக்கடியை வெற்றிகொள்ள தேவையான கொள்கை ரீதியிலான மாற்றங்கள் :

- கடன் மீள்கட்டமைப்பு நடவடிக்கைகளை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்தல்.
- ஊழலைத்தடுத்தலும் சட்டவாட்சியை நிலைநாட்டுவதற்குமான பின்வரும் நடவடிக்கைகள்
  - ஊழலுக்கெதிரான நடவடிக்கைகளுடன் இணைந்து கொள்ளல்.
  - அரச ஒப்பந்தங்களை திறந்த விலைமனுக்கோரலுக்கு அமைய வழங்கத் தேவையான அரசகொள்வனவுகளுக்கான சட்டதிட்டங்களை இயற்றல்.
  - ஐக்கிய நாடுகளின் போதைப்பொருள் மற்றும் குற்றங்கள் தொடர்பான அலுவலகம் மற்றும் உலக வங்கி ஆகியன இணைந்து நடைமுறைப்படுத்தும் கொள்ளையிடப்பட்ட சொத்துக்களை மீளப் பெற்றுக்கொள்ளும் நடைமுறையுடன் (StAR) இணைந்து செயற்படல்
- அரசாங்க வருமானங்களை உறுதிப்படுத்தி அரசிறை உறுதிப்பாட்டைப் நிலைப்படுத்தல்
- அரசாங்க செலவீடுகளை மத்தியகால சட்டகமொன்றின் கீழ் திட்டமிடுவதும் அரசதுறையின் வினைத்திறனை முன்னேற்றத் தேவையான சீர்திருத்தங்களை அறிமுகம் செய்தல்.
- பொதுச் சுகாதார மற்றும் கல்விக் கட்டமைப்புகளை வலுப்படுத்த போதுமானளவு நிதியொதுக்கீடுகளை மேற்கொள்ளல்,
- அரச தொழில் முயற்சிகளின் மறுசீரமைப்பு
- மத்தியவங்கியின் சுயாதீனத்தன்மையை வலுப்படுத்தி பணக்கொள்கையின் வினைத்திறனை அதிகரித்தல்.
- நெகிழ்தன்மைவாய்ந்த நாணயமாற்றுவீதத்தை பேணிச்செல்லல்.
- சென்மதி நிலுவையின் மேன்தகு தன்மையை ஏற்படுத்த வர்த்தக மற்றும் முதலீட்டுப் பாய்ச்சல்களை அதிகரித்தல்.


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

- வியாபாரம் செய்வதன் இலகுதன்மைபற்றிய குறிகாட்டியில் இலங்கையின் இடத்தினை முன்னேற்றத் தேவையான நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தல்.

(ஒரு விடயத்திற்கு 01 புள்ளி வீதம்
மொத்தம் 05 புள்ளிகள்)

(iii) உலக உற்பத்தி வலையமைப்புகளின் முக்கியத்துவம் :

- ஒரு பொருளின் உற்பத்திச் செயன்முறை நிலைக்குத்தாக வெவ்வேறு கட்டங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு கட்டத்தையும் நடைமுறைப்படுத்த வெவ்வேறு நாடுகளை நோக்கி கொண்டு செல்லும் உற்பத்தி வலையமைப்புகள் அண்மைய தசாப்தங்களில் சர்வதேச வர்த்தகத்தில் ஒரு பிரதான பண்பாக மாறியுள்ளது. ஒப்பீட்டு நன்மை அல்லது வேறு அடிப்படை பொருளாதார தகுதிவிதிகளின்படி பல்வேறு நாடுகளை நோக்கி உற்பத்திச் செயன்முறையானது பரந்து விரிந்து செல்வது இதன்போது நடைபெறும்.

- இதன் போது நடைபெறுவது யாதெனில் ஒரு பொருளின் பாகங்கள் வெவ்வேறு நாடுகளில் உற்பத்தி செய்யப்பட்டு அவற்றை ஒன்றிணைப்பதற்கு ஒரு நாட்டை நோக்கி அவற்றை அனுப்புவதாகும். உதாரணமாக டொயோட்டா மோட்டார் கார் ஜப்பானில் உற்பத்தி செய்யப்பட்டாலும் அதன் பல்வேறு உதிரிப் பாகங்கள் உலகின் பல்வேறு நாடுகளில் உள்ள தொழிற்சாலைகளிலேயே உற்பத்தி செய்யப்படுகின்றன.
(02 புள்ளிகள்)

- ஒரு நாட்டில் ஒரு பொருளை அல்லது சேவையை முழுமையாக உற்பத்தி செய்யத் தேவையான வளங்கள் அல்லது தொழில் நுட்பம் இல்லாத போது அவ்வுற்பத்திச் செயற்பாட்டின் ஏதாவது ஒரு கட்டத்தில் மாத்திரம் தன்னால் பங்குபற்ற முடியுமாயின்


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

தங்கியிருக்கும் ஒரு கட்டமாக மாற்றியுள்ளது. அரசியற் கட்சிகளின் பொருளாதாரக் கொள்கைகளின் கவர்ச்சிகரமான அம்சமாக இருப்பது அதன் மூலம் வழங்கப்படும் நிவாரணப் பொதி, பெற்றுத்தரப்படும் அரசாங்கத் தொழில்வாய்ப்புகளின் எண்ணிக்கை மற்றும் ஒருபோதும் நிறைவேற்றப்பட முடியாத வாக்குறுதிகளுமாகும். ஜனரஞ்சகமான முடிவுகளை நோக்கி நகரும் அரசியல்வாதிகள் ஒருபோதும் அத்தியாவசியமான அரசியல் மற்றும் பொருளாதார சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்த ஒத்துழைப்பு வழங்கவில்லை.

(02 புள்ளிகள்)

- மந்தகதியிலான பொருளாதார வளர்ச்சியில் செல்வாக்குச் செலுத்தியுள்ள மற்றொரு முக்கிய காரணி யாதெனில் மனிதர்களின் ஒழுக்கமும் விழுமியங்களும், தொழிலிடத்தில் ஒழுக்கம் கல்வி மற்றும் அரசியல் கலாசாரம் என்பவற்றின் பாதகமான போக்குகளாகும். குறிப்பாக அரசதுறையின் தொழிலிட ஒழுக்கம் மோசமடைதல் தொழிலிட ஒழுக்கத்திற்கு விரோதமாகச் செயற்படல் ஆகியன அரச துறையின் வினைத்திறனின்மைக்கு காரணமாகியுள்ளன.

- பிரயோக ரீதியான கொள்கைகளுக்குப் பதில் கோட்பாடுகளின் அடிப்படையில் கொள்கைகள் தீர்மானிக்கப்படல் உலகப் பொருளாதாரத்தின் வாய்ப்புகளைப் பயன்படுத்தி ஏற்றுமதி ஊக்குவிப்பை மேற்கொள்ளத் தவறியமை தொழிற்படையின் தொழில்நுட்ப நிபுணத்துவம் விருத்தியடையாமை என்பன பொருளாதாரத்தின் நீண்டகால பின்தங்கிய நிலைக்கு நேரடியாகப் பங்காற்றியுள்ளன.

01 புள்ளி

(மொத்தம் 05 புள்ளிகள்)



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/